# ஸ்ரீ வேதாந்த தீபிகை.

தொகுதி-22. எண்-6

டிசம்பர்-1933.

JL
R65ஐ811,N12
N33.22.6
158950

ஸம்புடம் 22] DECEMBER 1933 [ஸஞ்சிகை 6

456

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

ஸ்ரீமுக ௵

கார்த்திகை

PUBLISHED BY

SRI VAISHNAVA SIDHANTA SABHA,

MADRAS.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. தீண்டாமை:—[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டம் வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 159
2. ஸர்வமத வினு விடை:—[ஸ்ரீ. உப. வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி V. R. நரஸிம்ஹாசார்யர்] ... 164
3. ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்:—[புத்தங்கோட்டகம். வித்வாந். ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 172
4. ஸ்வதர்மம்:—[மஹாமஹோபாத்யாய தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 176
5. இந்தியா சட்ட சபைக்கு ஓர் மனு. ... 179
6. ஸம்பாதகரின் குறிப்புகள்:— ... 181
7. திவ்ய ஸூரி சரிதம்:—[வங்கீபுரம். கோழியாலம் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 1
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர் ... 345


---


# SRI VEDANTA DIPIKA

A monthly Magazine in Tamil, on Hindu Religion and Philosophy. Contains articles on social, religious and other problems affecting the well-being of all Hindus and mankind in general. The best medium for a healthy and peaceful exchange of views on topics relating to lives both here and hereafter.

| | | | | |
|---|---|---|---|---|
| Subscription (annual) | Rs. | 3 | 0 | 0 |
| Single copy | | 0 | 5 | 0 |

***Apply to:—***

**Manager, Kotnis Gardens, E. Mambalam,**
**Teynampet, P. O., Madras.**


ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

த்ரிஸூவநகஉநம் தஉாமுவணஃ
ரவிகூரமளாரவரூாஂவாரஂ ஊயாநெ।
வவஃரஉகக்ஷுராவருதாநநாஜெ
விஜயஸவெ ரதிரஹூ ஜெஉநவஶ்ரா॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை


ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 22.] ஸ்ரீமுக ஸூ கார்த்திகைமீ [ஸஞ்சிகை 6.


ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

## தீண்டாமை

(தொடர்ச்சி: ஸஞ்சிகை 5 பக்கம் 136)

**ஸ்ம்ருதிகள் ப்ரமாணம்.**

‘ ஸ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா ’ என்கிறபடியே ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞா ரூபமாய், ‘ ஸ்ருதிம் பச்யந்தி முநய: ஸ்மரந்தி ச ததா ஸ்ம்ருதிம்’ என்கிறபடியே தமது தபோ மஹிமையினால் திவ்ய த்ருஷ்டியைப் பெற்று, அதி ஸூக்ஷ்மமான வேதங்களின் அர்த்தங்களை உள்ளபடி உணர்ந்து, லோக ஹிதத்தின் பொருட்டு ஸ்ம்ருதி ரூபமாக மஹர்ஷிகளால் அருளிச் செய்யப்பட்ட தர்ம சாஸ்த்ரங்களை, ‘ இவைகள் மனிதர்களால் எழுதப்பட்டவை ; அஜ்ஞாநம் ஸம்சயம் விபர்யயம் என்கிற தோஷங்கள் மனிதர்களுக்கு இயற்கையாக ஸம்பாவிதங்கள்தான் ; ஆகவே இவைகள் நமது அநுஷ்டாநத்திற்கு எங்ஙனம் ப்ரமாண மாகக்கூடும்? ஆகையால் தீண்டாத ஜாதிபேதங்

158950



களும், அவற்றின் வேண்டாமையும் தர்ம சாஸ்த்ரங்க ளெனப்படும் ஸ்ம்ருதிகளில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், நாம் அவற்றை ஆதரிக்கவேண்டிய அவச்யமில்லை' என்று இக்காலத்தில் சிலர் உபந்யஸிக்கிறார்கள். இது சரியல்லவென்பதை நிரூபிக்கிறோம்.

இவர்களால் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்படும் வேதத்திலேயே பல விடங்களில், இவர்கள் அநாதரித்த ஸ்ம்ருதிகளையும், அந்த ஸ்ம்ருதிகளை எழுதிய ருஷிகளையும், ப்ரமாணமாகப் புகழ்ந்து பேசியிருப்பதால், வேதங்களை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளு மிவர்கள், அந்த வேதங்களால் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்பட்ட ஸ்ம்ருதிகளை அப்ரமாணங்க ளென்று அநாதரிக்க முடியாதன்றோ? ஆகையினால் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களை ப்ரமாணமென்று சொல்லுகிற சில வேத வாக்யங்களை இங்குக் குறிப்பிடுகின்றோம்.

[யஜுர் வேதத்தில் தைத்திரியம் முதல் ப்ரச்நம் இரண்டாம் அநுவாகம்:–] "𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍈𑌤𑌿𑌹𑍍𑌯𑌮𑌨𑍁𑌮𑌾𑌨𑌶𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 । 𑌏𑌤𑍈𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑍇𑌵 𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 ॥" இதற்கு வித்யாரண்ய பாஷ்யம்:— 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 - 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍍 - 𑌐𑌤𑌿𑌹𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 - 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌃 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌚𑌾𑌰𑌃 - 𑌏𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍈𑌃 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿" இந்த யஜுர் வேத வாக்யத்தினால், முக்ய ப்ரமாணங்களான வேதங்களோடுகூட, ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளும் நமக்கு ப்ரமாணங்களென்று வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.

[ஸாமவேதத்தின் ஒரு பாகமான சாந்தோக்யத்தில் ஏழாவது ப்ரபாடகத்தில் ஸநத்குமாரரைப் பார்த்து நாரதர் சொல்லும் வார்த்தை:] "𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌂 𑌭𑌗𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌮𑌿 - 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 - 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌮𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌮𑍍" என்று நான்கு வேதங்களோடு இதிஹாஸ புராணங்களையும் மற்றும் வித்யாஸ்தாநங்களையும் சேர்த்து அத்யயநம் பண்ணியதாகச் சொல்லியிருப்பதால், வேதங்கள் நமக்கு ப்ரமாணமாக இருப்பன போல, ருஷிகளால் சொல்லப்பட்ட இதிஹாஸ புராணங்களும் ப்ரமாணங்க ளென்றே சொல்லப் பட்டதாகிறது.



456

யஜுர்வேதத்தில், "𑌯𑌦𑍍𑌵𑍈 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌮𑌨𑍁𑌰𑌵𑌦𑌤𑍍𑌤𑌦𑍍𑌭𑍇𑌷𑌜𑌮𑍍" என்று மநுவினால் சொல்லப்பட்ட மநுஸ்ம்ருதி போன்ற வார்த்தைகள், வ்யாத்யஸ்தனுக்கு மருந்து போல் நம்மால் மிகவும் ஆதரிக்கத் தகுந்தன வென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷ தைத்திரியத்தில் தர்ம விசேஷத்தின் மஹிமையைத் நிர்மானிக்கு மிடத்தில், "𑌸𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌵𑌚𑌾 𑌰𑌾𑌥𑍀𑌤𑌰𑌃 𑌤𑌪 𑌇𑌤𑌿 𑌤𑌪𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌪𑍌𑌰𑍁𑌶𑌿𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌨𑌾𑌕𑍋 𑌮𑍌𑌦𑍍𑌗𑌲𑍍𑌯𑌃" என்று, இம்மஹர்ஷிகளுடைய அபிப்ராயங்கள், வேத புருஷன் அபிப்ராயத்துக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. "𑌸𑍈𑌷𑌾 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍀 𑌵𑌾𑌰𑍁𑌣𑍀 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾" என்று வேதம் சொன்ன விஷயத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணுவதற்காக இந்த வித்யை வருணனால் ப்ருகு ருஷிக்கு உபதேசிக்கப்பட்டதென்றும், "𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯𑌃" என்று இந்த விஷயத்தைப் பராசர ப்ரஹ்ம ருஷி புத்ரரான வ்யாஸர் சொன்னாரென்று ஷ விஷயத்தை ஆதரிப்பதற்காகச் சொல்லியிருக்கிறது.

முண்டகம் என்னும் அதர்வண வேதத்தில் ப்ரஹ்ம வித்யையைச் சொல்லி முடித்து, "𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍃𑌷𑌿𑌰𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚" என்று சொன்ன விஷயத்தில் நம்பிக்கை வருவதற்காக, 'இவ்விஷயத்தை அங்கிரஸ் என்னும் ருஷி சொன்னார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷ அதர்வண வேதமான ப்ரச்நோபநிஷத்தில், பிப்பலாதர் என்ற ருஷியினிடத்தில் சில ருஷிகள் ப்ரஹ்ம வித்யையை உபதேசம் பெற்ற கதையைச் சொல்லி முடித்து, "𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌿𑌭𑍍𑌯𑌃" என்று சொல்லி, வேத புருஷன் ஷ மஹர்ஷிகளை நமஸ்கரித்ததாகச் சொல்லியிருக்கிறது. இவைகள் இங்ஙனமிருக்க: வேதங்களில் ஒரு விஷயத்தைச் சொல்லும் இடங்களிலெல்லாம், அதை ஸத்யமென்று காட்டுவதற்காக, "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿" [இவ்விஷயத்தை ப்ரஹ்மவித்துக்களான மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள்] என்று ஆயிரக்கணக்கான இடங்களில் வேதத்திற்கு ப்ரமாணமாக மஹர்ஷி வசநங்கள் ஆதரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சுக்ல யஜுர் வேதமான ப்ருஹதாரண்யகம் முதலான இடங்களில், ஸ்ம்ருதி கர்த்தாக்களான யாஜ்ஞவல்க்யர் முதலான பற்பல மஹர்ஷிகளைக் கொண்டாடியிருப்பதும், மஹர்ஷி வசநங்களைக் கூட விஸ்தாரமாக உபதேசித்திருப்பதையும் நம்மால் கூற முடியுமோ?

ஆகையினால் வேதங்களை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டவர்கள் வேதங்களால் ஆதரிக்கப்பட்ட மஹர்ஷி வசநங்களான ஸ்ம்ருதிகளையும் முக்ய ப்ரமாணமென்றே அங்கீகரிக்க வேண்டியது அவச்யம்.

நிற்க: ஹிந்து மதஸ்தர்கள் யாவராலும் கொண்டாடப்படும் ராமாயணத்திலும் (கிஷ்கிந்தா காண்டம்: 18-வது ஸர்க்கம்) "𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌮𑌨𑍁𑌨𑌾 𑌗𑍀𑌤𑍌 𑌶𑍍𑌲𑍋𑌕𑍌 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌸𑌲𑍌 । 𑌗𑍃𑌹𑍀𑌤𑍌 𑌧𑌰𑍍𑌮𑌕𑍁𑌶𑌲𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 𑌤𑌚𑍍𑌚𑌰𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾 ॥ 𑌰𑌾𑌜𑌭𑌿𑌰𑍍𑌧𑍃𑌤𑌦𑌣𑍍𑌡𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌯𑌥𑌾 ॥ 𑌶𑌾𑌸𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑍍𑌤𑍇𑌨𑌃 𑌸𑍍𑌤𑍇𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌶𑌾𑌸𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌸𑍍𑌤𑍇𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌂 ॥" என்று ஸ்ரீராமன் வாலியைப் பார்த்து, 'மநுவினால் சொல்லப்பட்ட இரண்டு ச்லோகங்கள் ப்ரஸித்தமன்றோ? ஷை ச்லோகத்தில் சொல்லப்பட்ட விஷயம் தார்மிகர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது; நானும் அந்த மநுவின் வாக்யப்படியே தான் அநுஷ்டித்து வந்தேன்' என்று சொல்லுகிறார். இங்கு எழுதப்பட்ட மநு ஸ்ம்ருதி எட்டாம் அத்யாயத்தில் கூறப்படும் ராஜநீதிகளைக் கூறுமிடத்தில் படிக்கப்பட்டிருக்கும் 316, 318-வது ச்லோகங்களை ராமாயணத்தில் எழுதியிருப்பதைப் பார்க்கும் நமக்கு, ஸர்வேச்வரனுடைய அவதாரமான ஸ்ரீராமன், தமது அநுஷ்டாநத்திற்கு முக்ய ப்ரமாணமென்று ஆதரிக்க, மநு ஸ்ம்ருதியை இக்காலத்து நாகரிகர்கள் அப்ரமாணமென்று அநாதரித்தால் இவர்கள் வாக்யத்தை யாராவது ஆதரிப்பார்களா? ஆனால், 'மஹர்ஷிகள் எல்லாரும் மனிதர்களாகையால், அவர்களுடைய வார்த்தைகளான ஸ்ம்ருதிகளை நாம் ஏன் ஆதரிக்கவேண்டும்?' என்று சொல்லுகிற நமது நாகரிகர்களுடைய வார்த்தையை நன்றாய்க் கவனிக்கும் நமக்கு, 'மனிதர்களான தங்களுடைய மஹர்ஷிகளின் வார்த்தையான ஸ்ம்ருதிகள் ப்ரமாணமாகா' என்கிற இந்த வார்த்தையையும் நாம் ஆதரிக்கவேண்டியதில்லை என்று அவர்களே சொல்லிவிட்டதாக முடிகிறதன்றோ? எனவே: ஸ்ம்ருதிகளில் விசேஷ நம்பிக்கையுள்ள நமக்கு, நாகரிகர்கள் வார்த்தையும் விருத்தமாகாது. "[illegible]" என்கிறபடியே உள்ள உலகத்தை அடியோடு அழிக்கவும், புதியதோர் உலகத்தைத் தனியே ஸ்ருஷ்டிக்கவும் ஸமர்த்தர்களான மஹர்ஷிகளும் மனிதராகையாலே, அவர்களோடொக்க, நீட்ட முடக்கச் சக்தியற்ற



நம்போலிகளையும் சேர்த்து, 'நாமும் அவர்கள் போலவே மனிதர் தாம்' என்று நினைப்பதே மஹா பாதகமாகுமன்றோ? இங்கு, "ஈயாடுவதோ கருடற்கெதிரே" என்கிற மஹா புருஷனுடைய பாசுரம் நமது நினைவிற்கு வருகிறது.

இப்படி, தர்ம சாஸ்த்ரங்கள் நமக்கு முக்ய ப்ரமாணங்களாகையினால், இந்த ஸ்ம்ருதிகளை அப்ரமாணமென்று சொல்லுகிறவர்கள் நாஸ்திகரென்றும், அவர்கள் ஸாதுக்களோடு ஸஹவாஸத்திற்கு அயோக்யரென்றும் மநுஸ்ம்ருதி கூறுகிறது. ["𑌯𑍋𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑍇 𑌮𑍂𑌲𑍇 𑌹𑍇𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌸 𑌸𑌾𑌧𑍁𑌭𑌿𑌰𑍍𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍋 𑌵𑍇𑌦𑌨𑌿𑌨𑍍𑌦𑌕𑌃 ॥"] ஆகையினால் வேதத்தை ப்ரமாணமென்று ஒப்புக்கொண்டவர்கள், கீழே வேதங்களால் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்பட்ட ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், இவைகளுக்கு விருத்தமல்லாத ஸாதுக்களுடைய அநுஷ்டாநங்கள், ஆகிய இவைகளையும் ப்ரமாணங்களென்றே அங்கீகரிக்கவேண்டியது அவசியமாகும்.

இப்படி, ஸ்ம்ருதிகளில் தீண்டாத ஜாதி பேதங்களும் அவைகளின் தீண்டாமையும் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், இந்த ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று மநுஸ்ம்ருதி ச்லோகங்கள் வ்யக்தமாகச் சொல்லுவதாலும், ஷை ச்லோக வ்யாக்யாநத்தில் குல்லூகபட்டர், 'தத்காலம் இங்குப் படிக்கப்படும் வேதங்களிலும், இங்கு நஷ்டமாய்ப் போன வேதங்களிலும், முன்பின் வாக்யமறியாமல் யாவராலும் வேதமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட 'கிலம்' என்கிற வேதங்களிலும் சொல்லப்பட்ட தர்மங்களையெல்லாம் மநு ஸ்ம்ருதியில் எழுதியிருக்கிறார்' என்று எழுதியிருப்பதாலும், ப்ரக்ருத தீண்டாமை என்பதும் வேதத்தில் இருக்கிறதென்பதற்கு ஸந்தேஹமில்லை. இவை, இங்குப் படிக்கப்படும் வேதபாகங்களிலும் காணப்படுகின்றன என்பதை முன்பே சொன்னோம். தவிர: நமது நாகரிகர்கள் சொல்லுகிறபடியே தர்ம சாஸ்த்ரங்களை, மனிதர்களுடைய வாக்யங்களாகையினால், அப்ரமாணமென்று அநாதரித்துவிட்டால், "[illegible]" என்கிற பாரத வாக்யத்தின்படியே ஜாதி ஆச்ரமம் கோத்ரம் ஸூத்ரம் தேசம் காலம் என்று பற்பல பேதங்களை அநுஸரித்து வெவ்வேறாக மாறியிருக்கும் தர்மங்களை நமக்குத் தெளிவாகத்

தெரிவிக்கும் வேதவாக்யங்கள் இல்லாததனால், நாம் நீண்ட காலமாக அநுஷ்டித்து வரும் தர்மங்கள் ஒன்றும் வேதத்தி லில்லையென்று ஸர்வ தர்மங்களையும் விட்டுவிட்டு ஆடுமாடுபோல் திரியவேண்டியதே மநுஷ்ய ஜாதிக்கு மேன்மையாகுமென்பதைப் புத்திமான்கள் கவனிக்கவேண்டும்.

ஆகையினால், தமது தபோ மஹிமையினால் திவ்ய த்ருஷ்டியை அடைந்து, இங்கில்லாத வேதங்களையெல்லாம் உள்ளபடி அறிந்து, அதனால் ருஷிகள் என்கிற அதிகாரத்தைப் பெற்று, ஸ்வ ப்ரயோஜநத்தைக் கடுகளவும் கருதாமல் உலக க்ஷேமத்திற்கென்றே எழுதி வைத்த ஈச்வரனுடைய ஆஜ்ஞாரூபமான தர்ம சாஸ்த்ரங்களை, ப்ரமாண மல்லவென்று ஈச்வரனிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் ஒரு போதும் சொல்லத் துணியார்.

புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

ஸ்ரீ:

## ஸர்வமத வினா விடை

வித்யாரத்நாகர வேதாந்த கேஸரி

**V. R.** நரஸிம்ஹாசார்யர் எழுதியது.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

(தொடர்ச்சி: ஸஞ்சிகை **5** பக்கம் **131**)

பலராம்:—தம்பீ! உன்னிஷ்டம்போல் விவரித்துக் கூறுகின்றேன். க்ரமமாக சார்வாகத்தில் ஆரம்பித்து வேதாந்த ஸித்தாந்தம் வரைக்கும் படிப்படியாகச் சொல்லிக்கொண்டு வரலாமா? அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டை முக்யமாக முதன் முதலில் கேட்டுவிட வேண்டு மென்று உனக்கு அவா இருக்கும்பக்ஷத்தில், அதைத் தெரிவித்தாயானால், உனது விருப்பத்தின்படி அதையே எடுத்துரைக்கின்றேன்.

கோபால்:—அண்ணா! ஸர்வ ப்ராணிகளுக்கும் பிதாவாகிய எம்பெருமான் ஜீவராசிகளுடைய உஜ்ஜீவநத்தைக் கருதி அந்தந்த அதிகாரிகளுடைய அந்தஸ்திற்குத் தக்கபடி சார்வாகம் முதலாக வேதாந்த மீறாகவுள்ள பற்பல ஸித்தாந்தங்களையும் உபதேசித்தருளினான் என்பதைக் கேட்டபின், மதங்கள் யாவற்றையுமே தெரிந்து



கொள்ளவேண்டுமென்று தான் அவா உண்டாகிறது. இவ்விஷயம் ஸஹ்ருதயர்களுக்கு ஹ்ருதயங்கமமா யிருக்கிறதன்றோ? ஆனாலும் மற்றை மதங்களின் ஸித்தாந்த ஸ்திதி யென்னவென்பதைப் பற்றிப் பின்னால் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். இப்போது முதன் முதலாக, நமது தேசத்தினரிடையில் விசேஷமாய்ப் பரவி நிற்பதும், ஸோபாந க்ரமத்திலும் மிக்க உயர்வுளதென்று பெரும்பாலாரால் போற்றி யேற்றிக்கொள்ளப் பெற்றிருப்பதுமான வைதிகமதம் எனப்படுகிற வேத சாஸ்த்ரத்தை யநுஸரித்து விளங்குகிறதான உத்தம ஸித்தாந்தத்தின் விசேஷங்களையே கேட்டறிந்துகொள்ள வேண்டுமென்று ஒரு வேட்கை யுண்டாகிறது. அதனைத் தமது உபதேசமெனும் அமிருத ரஸத்தை வார்த்துத் தீர்த்தருளவேண்டும்.

இந்த ஸித்தாந்தத்தில் ஜீவனென்பது என்ன? ஈச்வரனென்பது என்ன? ஸம்ஸாரத்தின் ஸ்வரூப மென்ன? அதன் காரண மென்ன? அதினின்று வீடுபெறுதலாகிய மோக்ஷமென்பதின் ஸ்வரூப மென்ன? அதற்கு ஸாதந மென்ன? இவைபோன்ற முக்யமான விஷயங்களைத் தயைசெய்து விளக்கியருள்க.

பலராம்:—தம்பீ! உனது ஸாரக்ரஹண யோக்யதைக்கு மெத்தவும் ஸந்தோஷிக்கின்றேன். ஆனால் உனது வினாக்களுக்கு விடையளிக்க இறங்குவதற்கு முன்னால், பொதுவாக இந்த வேத சாஸ்த்ரத்தைப்பற்றிய சில உண்மைகளைத் தெரிவிக்க வேண்டியது அவச்யமென்று தோன்றுவதால், அவைகளைப் பற்றிச் சிறிது கூறிவிட்டு, பிறகு உன் கேள்விக்கு வருகிறேன். ‘இந்த வேதசாஸ்த்ர மென்பது எப்போது உண்டாயிற்று? இதை இயற்றியது ஈச்வரன் தானா? இது ஒரு ப்ரமாணமாக வரவேண்டியதற்கு அவச்யமென்ன? இதன்கண் அத்தகைய ப்ரமாணத் தன்மைக்கு உரிய பெருமைகள் பொருந்தியிருக்கின்றனவா?’ என்பது போன்ற சில முக்ய விஷயங்களை இப்போது விளக்கிக் கூறுகின்றேன், கேள்.

வேதசாஸ்த்ரம் எப்போ துண்டாயிற்றென்கிற விஷயத்தில் வைதிகர்களுடைய அபிப்ராய மென்ன வெனில், இது அநாதிகாலமாய் விளங்கிக்கொண்டிருக்கிற நித்யமான வஸ்துவென்பதுதான். ‘ஆனால் வேதசாஸ்த்ர மென்பது ஒருவகைச் சொற்றொடர் தானே? இதை நித்யமென்னக்கூடுமோ? உலகத்தில் காவ்யம் நாடகம் சிற்பம் போன்ற எந்த க்ரந்தங்களைப் பார்த்தாலும், அதுபோல் நீதி ஸம்பந்தமான எவ்வித சட்ட திட்டங்களைப் பார்த்தாலும் அவை யாவும் என்றைக்கேனும் எவராலேனும் நிர்மிக்கப்பட் டிருப்பதாகவே யன்றோ நிர்ண

யிக்கப்பட லாகிறது? ஒரு நூலென்றால், அது என்றைக்கேனும் எவ
ராலேனும் இயற்றப்பட்டுத் தானே இருக்கவேண்டும்? அதுவன்றி,
இவ்வேத நூல் ஒன்றைமட்டும் நித்யமென்பது யுக்தமாகத் தோன்ற
வில்லையே' என்று நீ ஸந்தேஹப்படுவாய். இதைப்பற்றிய உண்மை
யைச் சொல்லுகின்றேன். வைதிகர்கள் இவ்வேத சாஸ்த்ரத்தை
நித்ய மென்கிற தெல்லாம் இரண்டு விதமான கருத்தைக் கொண்டு
தான். இது இவ்வுலகத்தில் பழக்கத்திற்கு வந்த அன்று முதலாக
இன்று வரையில் ஒரு வாக்யம் அல்லது ஒரு பதம் ஒரு எழுத்து
அல்லது ஒரு ஸ்வரத்திற் கூட ஈஷத்தேனும் மாறுதலென்ப தில்லா
மல் ஒரே ரீதியில் சிஷ்ய ப்ரசிஷ்ய பாரம்பர்யமாக ஓதப்பட்டு வருகிற
தென்பது அதிலொன்று. எனவே, ஸ்வர வர்ண பத வாக்ய க்ரம
மெனப்படுகிற முறையில் இது எக்காலத்திலும் ஒரு எள்ளள
வேனும் பிறழாமல் நம்மவர்களால் மெத்த ஸாவதானமாய்ப் பயின்று
வரப் பெற்றிருக்கிற தென்றதாயிற்று. இது மிக்க அபூர்வமான விஷ
யம் தான். ஏனெனில், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் போன்ற பெரியார்
கள் பாடி வைத்த கீர்த்தநங்களிலும், ஸ்வர பேதம் ஸாஹித்ய பேதம்
ராகத்திலுங் கூட பேதத்தோடு பலவகையாக எத்தனைக் கீர்த்த
நங்கள் தத்காலம் பாடப்படுவதைப் பார்க்கின்றோம்? ஒவ்வொரு ஸம்
ப்ரதாயஸ்தர்களும் தாம் தாம் பாடுகிற முறையே பழைய அஸல்
முறையென்று அபிமானித்துப் போராடுவதால், உள்ளபடி அப்பெரி
யார் பாடிய முறை எதுவென்பதைக் கண்டு பிடிப்பதும் அரிதாகி
விடுகிறது. மொத்தத்தில் அம்முறையே கால க்ரமத்தில் சிறிது சிறி
தாக மாறி நழுவி விட்டதோ, என்று கூட ஸந்தேஹிக்க இடமுண்
டாயிருக்கிற தன்றோ? இப்படியே ராமாயணம் முதலான இதிஹா
ஸங்களிலும் ப்ரக்ஷிப்தமென்றும் ப்ரமுஷ்ட மென்றும் (அதாவது:
ஆக்கியவர் சொல்லாத சில அந்ய வாக்யங்கள் கையாளுகிறவர்களின்
தவற்றால் பிந்தி வந்து க்ரந்தத்தில் புகுந்து விட்டவை; கவி
சொல்லிய மற்றுஞ் சில ச்லோகங்களே பின்னவரின் தோஷத்தால்
கை நழுவ விடப்பட்டனவென்றும்) இருவிதமாகவும் விவாதம்
வலுத்து, அவ்விஷயத்தின் உண்மையே இன்னதென்று காணக்கூடா
மல் மறைந்து விட்டதன்றோ? அப்படிப்பட்ட துர்த்தசையின்
வாடைகூட இவ்வேத சாஸ்த்ரத்தின் பக்கமாக வீசுவதற்கும் இட
மில்லாமல் இது சிஷ்ய ப்ரசிஷ்ய பாரம்பர்யமாக ஸ்வர வர்ண பத
வாக்ய ஸமுதாயங்கள் யதாக்ரமமாய் அப்யஸிக்கப்பட்டு வருகிறது.
அக்குறைக ளொன்றும் நெருங்க இடங்கொடுக்க லாகாதென்றே
இதைச் சிறுகச் சிறுக உபாத்யாயர் உச்சரித்துக் காட்ட, சீடன்

கூடச் சொல்லிக் கற்றுக்கொண்டு மனப்பாடமாகச் செய்துகொள்ள
வேண்டுமேயின்றி, புஸ்தக பாடம் முதலான தப்பு வழிகள் கூடா
வென்றும், அப்படி வழிதப்பிப் பெற்றாலும் அது பயன்படாமற்
போய்விடு மென்பதோடு விபரீதமாயும் முடியுமென்றுங் கூட வைதி
கர்கள் ஒரு கண்டிப்பான வ்யவஸ்தையை ஏற்படுத்தி யிருக்கின்ற
னர். இன்றேல், மற்றை நூல்களுக்குத் தோன்றிய துர்த்தசை
இதனையும் பிடித்து விடுமன்றோ ?

கோபால்:—அண்ணா! நடுவில் ஒன்று கேட்கவேண்டியதா யிருக்
கிறது. அதற்காக மன்னித்து விடை யளிக்கவேண்டும். மாந்தர்கள்
ஒரு க்ரந்தத்தை அப்யஸிப்பதெல்லாம், அது தம்மா லறியமுடியாத
தத்வத்தை விளக்கிக்காட்டுகிற தென்கிற ஒரு ஏற்றத்தைக்கொண்டு
தானே? அப்படியிருக்க, அதனை இவர்கள் தம் மனம்போன படிக்
கெல்லாம் கூட்டவோ குறைக்கவோ திருத்தவோ செய்கிறதென்று
ஏற்பட்டு விட்டால், இனி அதற்குள்ள பெருமை குலைந்தன்றோ
போய்விடும்? இந்த நஷ்டத்தையும் பொருட் படுத்தாமல் இவர்கள்
எந்த லாபத்தை யெண்ணி அத்துணிகரமான காரியத்தைச் செய்
யத் தலைப்பட்டனர்?

பலராம்:—தம்பீ ! மனிதர்கள் பெரும்பாலும் உண்மையை
உணருவதற்கு ஆவலுள்ளவர்கள்தான். ஆனால் நடுநிலையிலுள்ள
பலர், அவ்வுண்மையைக் கண்டுபிடிப்பதற்கே பற்பல நூல்களையும்
தமது யுக்தி அநுபவாதிகளையும் உபயோகிக்கின்றனர். பக்ஷபாத
முள்ள சிலரோவெனில், தாமொன்றை உண்மையென்று தீர்மானித்
துக்கொண்டு, உலகத்திலுள்ள ப்ரமாண நூல்களையெல்லாம் அத
னோடு பிணைத்துக் கட்டிப்போடவேண்டு மென்று பலாத்காரமாய்
இழுத்துக்கொண்டு போராடுகின்றனர். எனவே, முன்னவர், உண்
மையுள்ள விடத்தில் மனம் த்ருப்தியடைந்து நின்று விடுகின்றனர்.
பின்னவரோ வெனில், தாம் அபிமானித்த விடங்களுக்கெல்லாம் ப்ர
மாண வசநங்கள் யாவும் வாய் பொத்தித்துக்கொண்டு வந்து நிற்க
வேண்டுமென்று துராக்ரஹப்பட்டுத் திண்டாடுகின்றனர். அன்றி
யும், அவ்வசநங்களுக் கெல்லாம் கூடுமானவரையில் மனம்போனபடி
தாறுமாறாகப் பொரு ளுரைக்கவும் ஆரம்பிக்கின்றனர். இந்தச் சங்க
டத்திற்கு இடங்கொடாமல் சில வசநங்கள் முடிவுவரையில் முரண்
பட்டுக்கொண்டே நிற்குமானால், வேறு கதியில்லாமல் அவ்வசநங்
களை அந்நூலை விட்டு நீக்கிவிடவேண்டிய நிலைக்கு வந்து, கூசாமல்
அப்படியே 'யாரெதைக் கண்டார்கள்? காணத்தான் போகிறார்கள்'?
என்கிற நெஞ்சழுத்தத்தினால் நீக்கியும் விடுகிறார்கள். இவ்வளவு

மட்டுமல்ல; தம் மதத்தை ஸ்தாபிக்கக்கூடிய கற்பித வசனங்கள் சிலவற்றையும், பாலில் நீரைக் கலப்பதுபோல அந்நூல்களுடன் கலந்து கோத்துவைத்தும் விடுகின்றனர். தம்பீ! இதனால் தான், பழைய லௌகிக நூல்கள் பலவற்றுள், ப்ரக்ஷிப்த மென்றும் ப்ரமுஷ்ட மென்றும் பாடங்கள் பேதித்துக் குழப்பத்தை விளைவிக்க இடமுண்டாயிற்று. வேத சாஸ்த்ரத்திலோ வெனில், இக்கலக்கத்திற்கு அவகாசமே யில்லை. இதனை மனப்பாடம் பண்ணவேண்டியதற்குள்ள விதிகளைப் பார்த்தாலே, இதனுள் முற்றமுந்துற ஏற்பட்ட க்ரமத்திற்கு மாறாக, ஸ்வரத்திலோ வர்ணபத வாக்யங்களிலோ எதிலும் ஒரு கடுகளவுகூட வித்யாஸப்பட முடியாதென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறதன்றோ? இப்படிப்பட்ட ஸ்தைர்யம் (அசைவுறாமை) வேதசாஸ்த்ர மொன்றுக்குத்தான் அஸாதாரணமா யுள்ளது. மந்வாதி ஸ்ம்ருதிகளுக்குக்கூட இது ஸுலபமானதல்ல. வாதி ஒருவர், தாம் சொல்லிய விஷயத்தை ஸ்தாபிப்பதற்காக ஏதோ ஒரு ச்லோகத்தை ப்ரமாண மென்று சொல்லிக் காண்பித்தார். அது கேட்ட ப்ரதிவாதி ஸந்தேஹப்பட்டு, 'இந்த ச்லோகத்தை எந்த ப்ரமாண க்ரந்தத்திலிருந்து எடுத்துக் கூறுகிறீர்களோ?' என்று மர்யாதையாய் ப்ரச்நம் பண்ணினார். அதற்கு அவர் சற்றுந் தயங்காமல் 'மநுஸ்ம்ருதி பன்னிரண்டாவது அத்யாயத்திலிருந்து எடுத்துச் சொன்னேன்' என்று திட்டமாய் உத்தரங் கொடுத்தார். இதைக் கேட்டவுடனே ப்ரதிவாதி திடுக்கிட்டுப் போனார். ஏனெனில், அவருக்கு மநுஸ்ம்ருதி முழுவதும் மனப்பாடம். இந்த ச்லோகம் அதிலில்லையென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். வாதி பொய் பேசுகிறாரென்பது விளங்கிவிட்டது. அதை ஸபைக்கு நிரூபித்துவிடவேண்டு மென்றெண்ணி, ஓடோடிப்போய் மநுஸ்ம்ருதி புத்தகத்தை எடுத்துவந்து, அவர் குறித்த அத்யாயம் முழுவதையும் உரக்கப் படித்தார். அந்த ச்லோகம் அதில் தென்படவேயில்லை. 'இப்போ தென்ன சொல்லுகிறீர்?' என்று வாதியை அதட்டினாற்போல் கேட்டார். அதற்கவர், 'இப்போது நான் புதிதாகச் சொல்லவேண்டிய தென்ன விருக்கிறது? நான்தான் மநுவிலிருந்து அந்த ச்லோகத்தை எடுத்து விட்டேனென்று அப்போதே சொல்லியிருக்கிறேனே! இனி அது அங்கெப்படியிருக்கும்?' என்று சற்றும் பதட்ட மில்லாமல் பதில் சொன்னார். இப்படி ஒரு கதை சொல்வதுண்டு. இவ்வித அஸந்தர்ப்ப மொன்றும் வேத சாஸ்த்ரத்தை யணுக முடியாமல், அதன் மனப்பாட முறையே அதனைக் காப்பாற்றுகிற தென்கை மிகையாகாது.



கோபால்:—விளங்கிவிட்டது. இப்படி அன்றுமுதல் இன்றுவரையில் ஸ்வர வர்ணாதிகளான எந்தப் பாகத்திலும் சற்றேனும் மாறுதலின்றி ஏகரூபமாகவே யிருப்பதைக் கொண்டுதான் இந்த வேத சாஸ்த்ரத்தை வைதிகர்கள் நித்யமென்று கொண்டாடுகின்றனர். ஆனாலும் இவ்வளவைக்கொண்டு, வேதத்தை ஸதா ஏக ரூபமென்று சொல்லலா மென்றாலும், நித்யமென்று கூடச் சொல்லலாகுமோ? முதன் முதலிற் சொல்லியபடியேதான் இன்றைக்கு மிருக்கின்ற தென்றாலும், ஈதொரு சொற்றொடரே யாதலின், இதனையும் என்றைக்கேனும் எவரேனு மொருவர் சொல்லித்தான் வைத்திருக்க வேண்டு மென்கிற ந்யாயத்தின்படி பார்த்தால், இதனை நித்யமென்றது தவறென்றோ அல்லது கேவலம் உபசார மென்றோதானே ஏற்படும்?

பலராம்:—தம்பீ! நீ சங்கிப்பது சரிதான். ஆனால் ஆரம்பத்தில், வேத சாஸ்த்ரத்தை நித்யமென்கிற வைதிகர்களுக்கு இரண்டு கருத்துக்கள் உளவென்று யான் சொன்னேனல்லவா? அவற்றுள் ஒன்றைச் சொல்லிவிட்டேன்: இப்போது மற்றொன்றையும் கூறுகிறேன். அதனால் இச்சங்கை ஒருவாறாகத் தீர்ந்துவிடும். ஆதலால் அதையுங் கேள். தர்க்க ரீதியில் பார்த்தால், பதவாக்யமான ப்ரபந்தங்கள் எல்லாவற்றுக்கும் ஆதியில் ஒரு நிர்மாண கர்த்தா இருக்கவேண்டியதென்றுதான் ஏற்படுகிறது. ஆனால் இவ்வேதத்திற்கு அந்த ஆதி கர்த்தா யார் என்றுதான் இன்றைக்கும் எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வளவைக் கொண்டுதான் வைதிகர்களான நாங்கள் வேத சாஸ்த்ரத்தை அநாதியான நித்ய வஸ்து வென்கின்றோம். லௌகிக மேதாவிகளான நீங்களும், தலைப்பு தெரியாததைமட்டுங் கொண்டு, பற்பல பொருட்களை அநாதியென்றே அங்கீகரித்திருக்கிறீர்கள். உதாஹரணமாக: பீஜாங்குரங்களை எடுத்துக்கொள்வோம். 'விதை முந்தியதா செடி முந்தியதா? இவ்விதை முதன்முதலாக எப்போது உண்டாயிற்று? அப்படி உண்டாக்கியது யார்?' என்பது போன்ற கேள்விக்கெல்லாம் நீங்கள் அளித்திடும் விடையென்ன? இது ப்ரவாஹ அநாதியென்பது தானே? அதே ந்யாயந்தான் இங்கும். நீங்களாவது, உங்களுடைய புத்தி கூர்மையினால் கண்டுபிடித்து, 'இவர்தான் வேதத்தை முதலிற் சொல்லியது; இதற்கு முன் வேதமென்பதே யில்லாம லிருந்தது' என்று தக்க ருஜுவுடன் காட்டி விட்டீர்களானால் நாங்கள் உடனே நித்யமென்கிற எங்கள் கொள்கையை மாற்றிக்கொண்டு விடுகிறோம் என்று யுக்தி வாதிகள் மீது ஆயுதத்தைத் திருப்பிப் பிடிக்கின்றார்கள் வைதிக வித்வான்

கள். எனவே, இந்த வேத சாஸ்த்ரத்தை முதன் முதலில் நிர்மித்தது யாரென்று இன்று வரையிலும் எந்த மேதாவிகளும் கண்டுபிடித்து விடவில்லை யாதலாலும், தோன்றிய நாளாக இது ஸதா ஏகரூபமாய் மாறுதல் சிறிது மின்றிக்கே விளங்கி வருவதாலும், இது நித்ய மென்றதாயிற்று. இவ்விஷயம் மிக்க யுக்தமானதே. ஒரு பொருளுக்குத் தலைப்பு தெரியாவிட்டாலும், உருவில் மாறுதல் ஒன்றும் ஏற்படா விட்டாலும், அதனை நித்யமென்று சொல்வது ஸஹஜந்தான். ஆனால் அப்பொருள் ஸந்ததி க்ரமத்தில் மாறி மாறிப் பிறக்குமானால், பீஜாங்குரம் போன்ற அதனை ப்ரவாஹ அநாதியென்கிறோம். ஆகாயம் முதலானவற்றைப் போல ஸ்வரூபத்தில் மாறுதலே யில்லாமலிருக்கு மானாலோ, அவற்றை நித்யமென்றே சொல்லி விடுகின்றோம். பிருதிவி ஜலம் தேஜஸ் வாயு ஆகாயம் என்கிற ஐந்து பூதங்களும் பகவத் ஸ்ருஷ்டியிற் சேர்ந்தவைதா னென்றாலும், ஆகாயத்தை மட்டும் பலர் நித்யமென்று நினைக்கிறார்களே, அதற்குக் காரணமென்ன ? அது மற்றவைகளைப் போல் தனது ஸ்வரூபத்தில் விகார மெனப்படுகிற மாறுதல் அடையாதிருப்பது தானே ? அந்த ந்யாயம் வேதவிஷயத்திலும் செலாவணி யுள்ளது தான். ஆனால் இங்குத் தார்க்கிகர் முதலானோர், சிலர் இவ்வேத சாஸ்த்ரத்தை ஈச்வரன் இயற்றிய தென்று கூறுகின்றனர். அப்படியவர்கள் சொல்வதற்கு,நாலென்றால் யாரேனு மொருவர் அதை நிர்மித்துத்தா னிருக்க வேண்டு மென்கிற நியமமும், நம்முள் ஒருவரும் அதனை நிர்மித்தவரில்லை யென்கிற நிச்சயமும் தான் காரணமென்ன வேண்டும். வைதிகர்களோ வெனில், வேதத்தை நம்முள் ஒருவரும் ஸ்ருஷ்டித்து விடவில்லை யென்பதை ஒப்புக் கொண்டாலும், ஈச்வரன் தான் நிர்மித்தா னென்பதற்குத் தக்க ஆதாரமில்லாததனாலும், வேதமில்லாமல் ஒரு காலம் இருந்ததாக ஒருவரேனும் பார்த்தில ராதலாலும், அதனை அநாதியென்றே அவர்கள் அங்கீகரித்தனர்.

கோபால்:—அண்ணா ! யுக்தியிற் சிறந்தவரென்று பெயர் பெற்றிருக்கிற தார்க்கிகர், மிகப் பொருத்த மாயிருக்கின்ற இந்த வைதிகரின் கொள்கையை அங்கீகரிக்காமல், வேதத்தை ஈச்வரனே செய்து வைத்தா னென்றதற்குக் காரண மென்னவோ ?

பலராம்:—தம்பீ ! இதை விவரித்துக் கூறுவதென்றால் மிகவும் விரிவடையும். ஆனதினால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், கேள். ஒரு சொல்லை ப்ரமாணமாக நம்புவதற்கு, அதைச் சொல்லியவரிடமுள்ள உண்மையுணர்வு, உபகாரசிந்தை, பொய் பேசாமை, முதலிய உத்தம குணங்கள்தான் காரணமென்பது தார்க்கிகரின் கருத்து. இனி, சொல்லியவர் இன்னாரென்று நிர்ணயிக்கப்படாத வரையில், எச் சொல்லையும் ப்ரமாணமென்று ஏற்றுக்கொள்ள இடமில்லை யாதலால், தாம் ப்ரமாணமென்று அங்கீகரித்த வேதத்திற்கு அத்தகைய அருங் குணம் நிறைந்த ஈச்வரனைக் கர்த்தாவென்று கற்பிக்கவேண்டியது அவர்கட்கு அவச்யமாகிவிட்டது. வைதிகர்களோ வெனில், ப்ரமாணமென்று நம்புவதற்குத் தடையான அறியாமை, அபகாரசிந்தை, அந்ருதவாதம், முதலான துர்க்குண மொன்றுமில்லாம லிருக்குமானால் அது மட்டுமே ஒரு சொல்லை நம்புவதற்குப் போதுமானதென்று கருதுகின்றனர். ஆகவே, வேதோபதேசத்தில் அத்தகைய குறை ஏதேனு மிருக்குமோ வென்று சங்கிப்பதற்கான சிந்நங்கூட காணக் கிடைக்காமையால், அதுகொண்டே கர்த்தா இன்னா ரென்கிற நிர்ணயத்தை வேண்டாமலே அதனை உத்தம ப்ரமாணமென்று நம்புவதற்குத் தடையில்லை யென்று கருதுகின்றனர். ஆனால், வைதிகர்கள் வேத சாஸ்த்ரத்தை ஈச்வரன் இயற்றியதாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அது ஜகத்திற்குப் பரமஹிதமான ஈச்வராஜ்ஞையின் ஒரு அரிய வெளியீடென்று மட்டும் கண்டிப்பாய்க் கூறுகின்றனர். ஒருவருடைய ஆணையை வேறொருவர் வெளியிடுவது கூடாததன்றே ? உதாரணமாக: ஒரு தேசத்தை யாளுகிற அரசனுடைய ஆக்கினையை, அவனால் சட்ட நிர்மாண விஷயத்தில் அதிகாரம் பெற்றிருப்பவர் வெளியிடுகிறானன்றோ ? எனவே, வேத சாஸ்த்ரம் ஈச்வர ப்ரோக்த மல்லவென்றாலும், அவனுடைய ஆஜ்ஞையே தானென்று வைதிகர்கள் மனப்பூர்வமாக நம்புகின்றனர்.

தம்பீ ! இதுவரையில் யான் சொல்லியதிலிருந்து யாமெடுத்துக்கொண்ட கேள்விகள் நான்கினுள், முன்னதான கேள்வி இரண்டிற்கும், (அதாவது: 'இந்த வேத சாஸ்த்ர மென்பது எப்போது உண்டாயிற்று? இதை இயற்றியவர் யார்? ஈச்வரன் தானோ?' என்கிற இரண்டு கேள்விக்கும்) பதில் கிடைத்திருக்குமே? இனி, பிந்திய இரண்டிற்கும் (அதாவது: இவ்வேதம் ஒரு ப்ரமாணமாக வரவேண்டிய அவச்யமென்ன? இதற்கு அத்தகைய ப்ரமாணத் தன்மைக்கு உற்ற பெருமை பொருந்தி இருக்கின்றதா? என்கிற இரண்டு கேள்விகளுக்கும்) முறையே விடை யளிக்கின்றேன் கேள்.

(தொடரும்)

श्रीः

श्री निगमान्तमहादेशिकाय नमः

# ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸாதுத்வ ஸமர்த்தநம்

---

ஸ்ரீதேசிகன், "ஸச்சரித்ர ரக்ஷை" என்னும் க்ரந்தத்தில் மூன்றாவது அதிகாரத்தில் பின் வருமாறு சில ஸூக்திகளை அநுக்ரஹித்திருக்கிறார்.

**"न च महते दैवतायेति महादेवः प्रतीयते। देवः, सत्त्वैश्वर्य तयाऽऽराध्यत्वात्; प्रसिद्धस्य नारायणतया श्रुतिप्रसिद्धस्य विष्णोर्देवाधिदेवस्य संज्ञाया समुदायेन वा प्रसिद्ध्यभावात्"**

இந்த ஸூக்திகளில் ஸ்ரீ தேசிகன் 'விச்வே தேவ' என்னும் சப்தத்தில் வ்யாகரண சாஸ்த்ரத்திற் சொல்லப்படாத 'அலுக்' வந்திருப்பதாக எழுதி இருக்கிறாரென்றும் அது வ்யாகரணமறிந்தவர்களால் பரிஹஸிக்கக்கூடிய விஷயமாகின்றது என்றும் சிலர் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள் என்பது நமது ஸுஹ்ருத்துக்களுக்குத் தெரிந்த விஷயம். ஸ்ரீ வைதிக ஸார்வ பௌமருடைய 'பித்ருமேத ஸார ஸுதீவிலோசநம்' என்னும் க்ரந்தத்தில் காணப்படும்

**"अत्र केचित् 'विश्वेदेवाय' इत्यत्र विश्वरूपं प्रयोगासाधुत्वं मन्यमानाः तत्र सर्वनाम्नः संज्ञोपसर्जनीभूतस्य अलुगभावात्, 'विश्वेदेवं हविः' 'विश्वेदेवेन वरुणः' इत्यादिषु प्रयोगान्"**

இந்த வாக்யங்களில் ஸ்ரீ வைதிக ஸார்வபௌமரும் ஸ்ரீ தேசிகனுடைய கீழ் உதாஹரிக்கப்பட்டுள்ள ஸூக்திகளைக் குறித்தே ஸ்ரீதேசிகனைத் தூஷித்திருப்பதாக ஸ்ரீ ஸுந்தர தேசிகர் என்னும் ஒருவர் எழுதி இருப்பதாகவும் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வஸ்துத: இந்தத் தோஷம் ஸ்ரீதேசிகனுடைய ஸூக்தியில் இராவிட்டாலும், சாஸ்த்ர ஜ்ஞாநமில்லாத ஸ்ரீ தேசிக பக்தர்களுள் சிலர்



இவர்களுடைய அபிப்ராயத்தைப் பார்த்து மதி மயங்கக் கூடுமாதலால், அப்படி அவர்கள் மதி மயங்காதபடி, 'ஸ்ரீ தேசிகனால் இங்கே அருளிச் செய்யப்பட்ட இந்த 'விச்வே தேவ' என்னும் சப்தத்திற்கு ஸமாஸ ஸம்ஜ்ஞையே இல்லை. ஆகையினால் தத்ப்ரயுக்தமான விபக்தி லோபமில்லை. ஆகையினால் அந்த லோபத்திற்கு நிஷேத ரூபமான 'அலுக்' ப்ரஸக்தியே இல்லை. இப்படி அப்ரஸக்த விஷயத்தை அருளிச் செய்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான ஸ்ரீ தேசிகனுக்கு ப்ரம ப்ரஸங்கமே இல்லை. ஆகையினால் சப்தவித்துக்கள் பரிஹஸிக்கும்படி அவர் எழுதவே இல்லை. ஆகையினால் அவருடைய க்ரந்தங்களில் தோஷ வாஸனையுமில்லை. ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளின் மஹிமையை அறிந்த ஸர்வஜ்ஞனான வைதிக ஸார்வ பௌமருக்கு ப்ரம ப்ரஸக்தியே இல்லை. ஆகையினால் ஸுதீவிலோசநத்தில் இந்த ஸ்ரீ ஸூக்தியைப்பற்றி அவர் தூஷிக்கவே இல்லை' என்பவை முதலிய வாஸ்தவமான விஷயங்களை ஸம்ப்ரதிபந்ந ப்ரமாணங்களோடு ஸமீசீந தர்க்கங்களோடும் யாவருமறியும்படி விசதமாக வெளிப்படுத்தி ஸ்ரீதேசிக பக்தர்களானப் பரமைகாந்திகளையும் ப்ராமாணிகர்களான மத்யஸ்த பண்டிதர்களையும் ஸந்தோஷிக்கும்படி பண்ணுவதே பகவத் கைங்கர்ய காஷ்டையாகையினால், இவ்விஷயத்தில் சில பாகவதர்களுடைய நியமந வ்யாஜத்தினால் ப்ரவ்ருத்தித்துக் கிஞ்சித்கரித்து க்ருதார்த்தனாகின்றேன். ஸாராஸார விவேகிகளான வித்வான்கள் இதிலுள்ள ஸாதுதமாம்சங்களை ஸ்வீகரித்து அஸாராம்சங்களை அநாதரிக்க ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ தேசிகன், ஸச்சரித்ர ரக்ஷையில், பகவானுக்கு நிவேதநம் செய்த அந்நத்தை எல்லாரும் புஜிக்கலா மென்னும் விஷயத்திற்கு ப்ரமாணங்களைக் காட்டும் ப்ரகரணத்தில்,

**"महते दैवतायाज्यं जुहाव ज्वलितेऽनले"**

என்னும் ராமாயண ச்லோகத்தை எழுதி, அதிலிருக்கிற 'மஹதே தைவதாய' என்னும் பதங்கள் நாராயணனைச் சொல்லுகின்றனவா? அல்லது ருத்ரனைச் சொல்லுகின்றனவா? என்னும் விஷயத்தைப் பற்றி விஸ்தாரமாக விசாரித்து, கடைசியில் அவை நாராயணனையே சொல்லுகின்றனவென்று தீர்மானித்திருக்கிறார். ப்ரக்ருத விவாத விஷயமான 'விச்வே தேவ' என்னும் சப்தம் இந்த விசாரத்தின் நடுவில் இருப்பதால் இந்த ப்ரகரணத்திற்கே அர்த்தம் எழுத வேண்டியது அவச்யமாக இருக்கின்றது.

'மஹதே' 'தைவதாய' என்னும் இரண்டு சப்தங்களுக்குள் 'மஹதே' என்னும் சப்தமானது வ்யாகரண சாஸ்த்திரத்தில்

பூஜார்த்தகமாகப் படிக்கப்பட்ட 'மஹ்' என்னும் தாதுவின் மேல் 'அதி' என்னும் ப்ரத்யயத்தோடு 'உணாதி' இரண்டாவது பாதத்திலிருக்கும் 'வர்த்தரமாநே' இத்யாதியான ஸூத்ரத்தினால் 'மஹத்' என்று நிபாதம் செய்யப்பட்டிருப்பதால் இந்தச் சப்தம் பூஜிக்கப்படுகிறவனைச் சொல்லுகின்றது. இங்கு பூஜிக்கும் விஷயத்தில் தேசம் காலம் வ்யக்தி முதலான உபாதிகள் சொல்லப்படாததால் அஸங்கோச ந்யாயத்தினால் 'எவ்விடத்திலும் எல்லாராலும் பூஜிக்கப்படுகிறவன்' என்னும் அர்த்தம் ஏற்படுகின்றது. அப்படிப் பூஜிக்கப்படுகிறவன் யார் என்பதை

"ஸர்வே வேதாஶ்ச ஸாங்க்யாஶ்ச யோகாஶ்சைவ மஹர்ஷய:।
ஸ்துவந்தி ஸததம் தேவம் நாராயணம் ஹரிம்॥"

என்னும் பாரத வாக்யமானது நாராயணன் தான் என்று விளக்குகின்றது. அப்படியே 'தைவத' என்னும் சப்தமும் தாது பாடத்தில் க்ரீடார்த்தகமாகப் படிக்கப்பட்டிருக்கிற 'திவ்' என்னும் தாதுவின் பேரில் 'கஞ்' முதலிய ப்ரத்யயம் வந்தால் 'தேவ' என்றாகி, அதன் மேல் 'தேவாத்தல்' என்னும் ஸூத்ரத்தால் 'தேவதா' என்றாகி, இந்தத் 'தேவதா' என்னும் சப்தமானது ப்ரஜ்ஞாதிகணத்தில் படிக்கப் பட்டிருப்பதால் 'தைவத' என்னும் நிஷ்பத்தியை அடைகின்றது. இந்தச் சப்தம் க்ரீடையை உடையவனைச் சொன்ன போதிலும், முன் போலவே அஸங்கோச ந்யாயத்தினால் எவ்விடத்திலும் எக்காலத்திலும் ஸர்வவிதங்களான க்ரீடாதிகளை உடையவனைச் சொல்லுகின்றது. அப்படிப்பட்ட க்ரீடை முதலியவைகளை உடையவன் நாராயணன் என்பதை

"ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:"

என்பது முதலான ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. ஆக இப்படி இந்த இரண்டு சப்தங்களும் யோக சக்தியினால் நாராயணனைச் சொல்லுகின்றன வென்பது ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளம்.

இங்கு 'இவ்விரண்டு சப்தங்களும் சேர்ந்து ரூடி சக்தியினால் ருத்ரனைச் சொல்லக்கூடாதா?' என்னும் சங்கை செய்யப் பட்டிருக்கின்றது. ஒரு சப்தத்திற்கு ஒரு அர்த்தத்தில் ரூடி சக்தியும் மற்றொரு அர்த்தத்தில் யோக சக்தியும் ஸம்பாவிதமானால், அங்கு யோக சக்தியை விட்டு ரூடி சக்தியையே அங்கீகரிக்க வேண்டுமென்பது சாஸ்த்ரங்களின் தீர்மானம். இந்தத் தீர்மானப்படி 'மஹாதேவ' என்னும் சப்தத்திற்கு ருத்ரனிடத்தில் ரூடி சக்தி இருப்பதாகக் கோசாதிகளில் ப்ரஸித்தமாக இருப்பதால், கீழில் சொல்லியபடி

'தேவ' என்னும் சப்தமே 'தைவத' என்று மாறியிருப்பதால், 'ஏக தேச விக்ருத மநந்யவத்' என்னும் ந்யாயமானது 'தைவத' சப்தமும் வேறல்லவென்று சொல்வதால், இந்த 'மஹாதே தைவதாய' என்னும் இரண்டு சப்தங்களும் சேர்ந்து, 'மஹா தேவ' என்னும் சப்தம் ருத்ரனிடத்தில் ரூடமாக இருப்பது போல, இவைகளும் ருத்ரனிடத்தில் ரூடமாக ஆகட்டும் என்பது தான் சங்கித்தவரின் அபிப்ராயம்.

இந்தச் சங்குக்கு,

"ஶைவ: ஸக்ஷஸைவ தயாஸெம்ஷ்வதாஸ"

என்று ஸமாதாநம் சொல்லி இருக்கிறுர். அதாவது:—'நடுவில் விபக்தி இல்லாத 'மஹாதேவ' என்னும் சப்தம்தான் ருத்ரனிடத்தில் ரூடி சக்தி உள்ளது; 'மஹாதே தைவதாய' என்னும் விபக்திகளை உடைய இவ்விரண்டு சப்தங்களுக்கு ருத்ரனிடத்தில் ரூடி சக்தி கிடையாது' என்று அர்த்தம். 'ஸமஸ்த' என்னும் சப்தத்திற்கு உலகத்தில் 'ஸமாஸம் என்னும் பெயரை உடையது' என்னும் அர்த்தம் ப்ரஸித்தமாக இருந்தாலும், இங்கிருக்கிற 'ஸமஸ்த' என்னும் சப்தத்திற்கு 'விபக்திகள் இராத' என்பதே அர்த்தம். ஸமாஸ ஸம்ஜ்ஞை வந்த சப்தங்களுடைய விபக்திகளுக்கு ப்ராயேண லோபம் வந்திருக்கிறபடியினுல் அப்படி ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே நடுவில் விபக்தியுள்ள 'மஹாதே தைவதாய' என்னும் சப்தங்களுக்கு ருத்ரனிடத்தில் ரூடி சக்தி கிடையாது என்று முடிந்தது.

இதற்கு மேல், 'விபக்திகளுடன் கூடின அஹமெ புத்ந்யாய விச்வேப்யோ தேவேப்ய:' என்னும் சில சப்தங்கள் விபக்திகளுடன் கூடி இருந்தும் சில தேவதைகளுக்கு நாமதேயங்களாக இருக்கக் காண்கிறபடியினுலும், மற்றும் ஸஹஸ்ர நாமத்தில் 'நிதிரவ்யய:' 'மங்களம் பரம்' என்று விபக்திகளை உடைய இரண்டு சப்தங்கள் சேர்ந்து ஓரே திருநாமமாக ஷை பாஷ்யங்களில் சொல்லப் பட்டிருப்பதாலும், இந்த 'மஹாதே தைவதாய' என்னும் இரண்டு சப்தங்களும் சேர்ந்து ஏன் ருத்ரனுக்கு நாமதேயமாகக் கூடாது? என்று சங்கையை நினைக்கிறுர்..

புத்தங்கோட்டகம். வித்வாந். ஸ்ரீநிவாஸாசார்யர்.

(தொடரும்)

ஸ்ரீ:.

# ஸ்வதர்மம்

[மஹாமஹோபாத்யாய. தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

---

இவ்வுலகில் இயற்கையாகவே அறிவிலிகளாக இருக்கிற மனிதர்களை உஜ்ஜீவிப்பிப்பதற்காகவே ப்ரவ்ருத்தித்திருக்கிற வேதங்களாலும் தர்ம சாஸ்த்ரங்களாலும் இதிஹாஸங்களாலும் ஸாத்விக புராணங்களாலும் சிஷ்டாசாரங்களாலும்; எதெது எவரெவர்களுக்கு உரியதென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதனை அவரவர்கள் தவறாமல் அநுஷ்டிப்பதே அவரவர்களுக்கு ஸ்வதர்மமாகும். (𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌃 = 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌃) ஸ்வதர்மம் என்பதற்குத் தன்னுடைய கடமை என்பது பொருள். எல்லோராலும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் விரும்பப்படுகிற ஸுகமும் துக்கநிவ்ருத்தியும் ஸ்வதர்மாநுஷ்டானத்தினாலேயே ஸித்திக்கின்றது. மனிதனுக்கு உலகத்தில் புகழ்ச்சியும் கௌரவமும் நல்லொழுக்கமும் ஜ்ஞானமும் சாந்தியும் ஸதாசாரமும் அபிவ்ருத்தியும் உத்ஸாஹமும் ஆரோக்யமும் நீண்ட ஆயுளும் இவையெல்லாம் ஏற்படுவதற்கு, இந்த ஸ்வதர்மாநுஷ்டானமொன்றே காரணமாக இருக்கின்றது. மனிதன் ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதனால் இம்மையில் மாத்ரமன்றி மறுமையிலும் சாச்வதமான சுகத்தைப் பெறுகின்றான். மகாபாரதத்திலுள்ள ஒரு ச்லோகத்தினால் பின்வருமான ஒரு பொருள் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது:—"மனிதனுக்கு இங்கு உண்டு, அங்கு இல்லை; அங்கு உண்டு இங்கு இல்லை; இங்கும் உண்டு, அங்கும் உண்டு; இங்கும் இல்லை 'அங்கும் இல்லை" என்பது தான். இதன் கருத்து என்னவென்றால்:—'ஸ்வதர்மத்தை முற்றிலும் விட்டுவிட்டுச் செல்வச் செருக்கால் இறுமாந்திருப்பவனுக்கு இவ்வுலகத்தில் ஸௌக்யமுண்டு; பரலோகத்தில் ஸுகமில்லை. பரம தரித்ரனாக இருந்துகொண்டு ஸ்வதர்மத்தை நன்கு அநுஷ்டிப்பவனுக்கு இவ்வுலகில் ஸுகமில்லை; பரலோகத்தில் ஸுகம் உண்டு. ஸ்வதர்மத்தையும் பற்றுதலுடன் அநுஷ்டித்துக்கொண்டு தனிகனாகவும் இருப்பவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் ஸுகமுண்டு. ஸ்வதர்மத்திலும் பற்றுதலிராமல் வ்ராத்யனாகவும் ஸம்பத் தில்லாதவனாகவும் இருப்பவனுக்கு இந்த உலகத்திலும் ஸுகமில்லை, பரலோகத்திலும் ஸுகமில்லை' என்பதுதான். ஆகையால், ஸுகாநுபவத்திற்கும் துக்கநிவ்ருத்திக்கும் ஸ்வதர்மாநுஷ்டானம் முக்ய ஸாதனமாகச் சாஸ்த்ரங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. தனக்கு உரியதான வேஷம் பாஷை செய்கை முதலிய எல்லாவற்றையும் ஸ்வதர்மம் என்று சொல்லலாம். ஒவ்வொருவனும் தன் வயதுக்கும் செய்கைக்கும் பொருளுக்கும் படிப்புக்கும் குலத்துக்கும் தக்கபடி வேஷம் வசநம் வ்ருத்தி இவைகள் ஒத்திருக்கும்படி நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு நடப்பது தான் அவனுக்கு மேன்மை பயக்கும். அப்படிக்கின்றி பசுக்கள் போல் ஒருவித வரம்பிலும் கட்டுப்படாமல் நினைத்த வண்ணம் வேஷத்தையும் பாஷையையும் ஆசாரத்தையும் மாற்றிக்கொள்வது அவனுடைய அறிவீனத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஸ்வதர்மத்தைக் கைப்பற்றுவதற்கோ அதைக் கைவிடுவதற்கோ நவீந நாகரிகம் வாய்ந்த சில லௌகிக மேதாவிகள் சிற்சில யுக்த்யாபாஸங்களைத் தம் மனம் போனபடி பிதற்றுகின்றனர். அறிவுடையோர் அந்தப் போலி யுக்திகளை ஏற்றுக்கொள்ளார். ஸ்வதர்மத்தை விலக்குவதற்கும் அந்யதர்மத்தைக் கையாடுவதற்கும் காரணம், அவிவேகத்தோடு குடியிருந்து வரும் அஸத் ஸங்கமே. இதுவே எல்லா அநர்த்தங்களுக்கும் மூல காரணம் என்று மஹான்கள் கூறுகின்றனர்.

"𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 𑌸𑌂𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇।
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌃 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃।
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿॥"

என்று வழங்கப்படுகிற பகவத் வசநம் இதில் ப்ரமாணம். இந்த ச்லோகத்திலுள்ள '𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍' என்கிற பதம் அஸத் ஸங்கத்தைக் குறிக்கின்றது. இயற்கையாகவே ஒருவனுக்குச் சிறந்த அநேக குணங்களிருந்த போதிலும் கெட்ட மனிதர்களுடைய சேர்க்கை ஏற்படுமானால் அந்த நற்குணங்கள் அனைத்தும் விஷ பிந்து வீழ்ந்த க்ஷீரகடாஹம் போல் கெட்டுப்போய்விடும். இவ்வண்ணமாக எல்லா அநர்த்தங்களுக்கும் காரணமாக இருக்கிற அஸத் ஸங்கத்தைப் போரப் பரிஹரிப்பதற்காகவே நற்குணமுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இளமைப் பருவத்திலேயே நல்லாசிரியர்களுடைய சேர்க்கையையும் நற்படிப்பையும் நற்குணங்களையும் நன்னடத்தையையும் ஏற்படுத்தி, அஸத் ஸங்கத்தால் அணுகக்கூடிய துர்வாஸனையை வேரோடு களைந்து விடுகிறார்கள். அது நீங்கினால் மனிதனுக்கு ஸ்வமதம் ஸ்வகுலம் ஸ்வதர்மம் ஸ்வாசாரம் இவைகளில் தானாகவே பற்றுதலுண்டாகின்றது; அவன் புருஷார்த்தங்கள் அனைத்தையும் அடையத் தகுதியுள்ளவனாகவுமாகிறான். மலைபோன்ற விபத்துக்கள் வந்த போதி

னும், ஸ்வதர்மத்தில் அசைவற்று நிற்பவன் அந்த விபத்துக்களைக் கடந்து ஸுகத்தைப் பெறுவான். இந்த விஷயத்தில் பாகவதோத்தமனை ப்ரஹ்லாதன் ஸாக்ஷி. ஸ்வதர்மத்தை ச்ரத்தையோடு அநுஷ்டிப்பவனுக்கு ஆரோக்யம் ஸுகம் ஸந்துஷ்டி தைவபக்தி தர்மமார்க்கத்தில் அபிருசி ஜீவகாருண்யம் பொறுமை தைர்யம் தூய்மை ஔதார்யம் ஜ்ஞாநம் இவை முதலிய அளவற்ற நற்குணங்கள் வஸித்திக்கின்றன. ஸ்ரீபாகவதத்தில் ஸ்ரீகண்ணபிரான் தன்னிடம் ருக்மிணீ தேவியினால் அனுப்பப்பட்டுத் தூது வந்த ப்ராஹ்மணனை நோக்கிக் குசல ப்ரச்ந வ்யாஜத்தால் ஸ்வதர்மாநுஷ்டாநத்தா லுண்டாகிற பயன்களை வெளியிட்டிருக்கிறார். அந்த ச்லோகங்களாவன:—

“𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌵𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑌮𑍍𑌮𑌤𑌃 ॥
𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌮𑌨𑌸𑌸𑍍𑌸𑌦𑌾 ।
𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌯𑌰𑍍𑌹𑌿 𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑍇𑌨𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍
𑌅𑌹𑍀𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌖𑌿𑌲𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ।
𑌅𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌕𑍃𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌪𑌿
𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌲𑌾𑌭𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌭𑍂𑌤
𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍 ।
𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌿𑌣𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌨𑌮𑌸𑍍𑌯𑍇 𑌶𑌿𑌰𑌸𑌾𑌽𑌸𑌕𑍃𑌤𑍍 ॥”

மற்றவர்களைப்பற்றி நாம் இப்பொழுது வ்யவஹரிக்க வரவில்லை; அது ஆவச்யகமுமன்று. ப்ராஹ்மணர்களுக்கு இப்பொழுது நேர்ந்திருக்கிற விபத்தை நோக்கியே துக்கஸாகரத்தில் அழுந்தி இவ்விஷயத்தை எழுதலானேன். யாகம் செய்தல் செய்வித்தல், வேத மோதுதல் ஓதுவித்தல், பொருளை ஈதல் ஈட்டல், இந்த ஆறும் ஸாமாந்ய தர்மங்கள். விசேஷித்து ஸ்நாநத்தை முன்னிட்ட ஸந்த்யா ஜபம் ஹோமம் தேவபூஜை அதிதிபூஜை வைச்வதேவம் ஆகிய இந்த ஆறு கர்மாக்களும் நாள்தோறும் அவசியம் ப்ராஹ்மணர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டியவைகள். இவைகள் முற்றிலும் லோபித்துவிட்டன. ஆயிரம் ப்ராஹ்மணர்களுக்குள் யாரோ ஒருவர் அநுஷ்டிப்பரோ இல்லையோ என்கிற ஸந்தேகம் நேர்ந்துவிட்டது.”

(தொடரும்.)

# இந்தியா சட்டசபைக்கு ஒரு மனு

---

இப்போது இந்திய சட்ட சபையில் “ஆலயப் பிரவேச மசோதா” ஆலோசனையில் இருந்துவருகிறது. அது விஷயமாக அடியிற் கையொப்பமிட்ட நாங்கள் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறதாவது:—

1. ஷை மசோதா மதத்தைப் பாதிக்கிறது. ஆகையால், அது சட்ட சபையின் வரம்புக்கு வெளிப்பட்டது.

2. மேன்மை தங்கிய விக்டோரியா மகா ராணியார் செய்துகொடுத்த மத ரக்ஷணைப் பிரதிஜ்ஞைக்கும், மதாசாரங்களில் பிரவேசிப்பதில்லை யென்ற பார்லிமெண்ட் சட்டங்களுக்கும், இதுவரையில் பிரிட்டிஷ் சர்க்கார் அனுஷ்டித்து வந்த நீதிமுறைக்கும் அது விரோதமாயிருக்கிறது.

3. ஷை மசோதா ஹிந்துமதத்தை மட்டும் குறிப்பிட்டுத் தாக்குகிறபடியால், எல்லா மதஸ்தர்களும் அடங்கிய சட்டசபையில் அதை விவாதிப்பது நியாயமல்ல.

4. நால்வகை ஜாதிக்குள்ளடங்கிய ஹிந்துக்களின் பிரயோஜனத்திற்காக மட்டும், அவர்கள் பாரம்பரையாய் ஆராதிக்கும் ஆலயங்கள் ஆதிமுதற்கொண்டு ஏற்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

5. அனாதிகாலமாய் ஷை ஆலயங்களில் அவர்ணிகள் பிரவேசித்தவர்களல்லர்; எப்போதாவது பிரவேசிக்கப் பாத்யம் கொண்டாடினவர்களுமல்லர்.

6. கோவில்களில் நுழைய வேண்டுமென்று அவர்ணிகள் ஆசைப்படவில்லை. அவர்கள் பூஜிக்கும் தேவதைகளும், கோவில்களும், பூஜை முறைகளும் தனியாய் இருக்கின்றன. ஷை மசோதா மூலமாய்ப் பரிஹரிக்கவேண்டிய நிஜமான குறை அவர்களுக் கொன்றுமில்லை.

7. ஷை மசோதாவின் முன்னுரையில் சொல்லப்பட்டிருக்கும் கிளர்ச்சியைச் சில ராஜீயவாதிகள் ராஜீய நோக்கங்களுடன் கிளப்பிவிட்டிருக்கிறார்களே யன்றி வேறல்ல.

8. ஷை மசோதா, ஹிந்து சமூக ஒழுங்குகளைக் கெடுப்பதும், ஹிந்து மதத்தை அவ்யவஸ்தைக் கொள்கைகளுக்கு உட்படுத்துவதுமாய் இருக்கிறது. நீதி, சட்டம், மதம், இவைகளின் ஆதாரங்களை அழிப்பதாயிருக்கிறது; ஆகையால் இது மிகவும் அனர்த்தகரமானது.

9. ஆகம சாஸ்திர விதிகளைக்கொண்டு கோவில்களின் நிர்மாணம் நித்திய பூஜை முதலானவைகள் நடக்கின்றன.

10. சாஸ்திரங்கள் கூறியிருக்கிறபடிக்கே விக்ரஹங்கள் ஆராதனத்துக்கு அர்ஹமாகின்றன வென்றும், தீண்டாதாரை விலக்கும் சாஸ்திர விதிகளை லௌகிக யுக்திகளைக்கொண்டு ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும், மனுதார்கள் நம்பு கிறார்கள்.

11. எங்களுடைய மத நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் ஷை மசோதா குலைக்கிறது.

12. இப்போது சட்டப்படிக்குள்ள பாத்தியங்களையும், நீண்ட காலமா யுள்ள மாமூல்களையும், ஷை மசோதா மாற்றுகிறதென்று அதன் பிரவர்த்தகர் களே ஒப்புக்கொள்கிறார்கள்.

13. ஷை மசோதா, சட்டத்தின் பலாத்காரத்தைக்கொண்டு, இந்து சமூ ஹத்தையும் மதத்தையும் தலைகீழாகப் புரட்டுவதா யிருக்கிறது. மத ஸம்பிர தாயங்களையும், ஜாதி வியவஸ்தைகளையும், அநாதி பரம்பரையாய் வந்த பழக் கங்களையும், அது முற்றிலும் நேர்முகமாய்த் தாக்குகிறது.

14. கோவில் தர்ம கர்த்தாக்கள் விசுவாஸ த்ரோஹமான காரியம் செய்வ தற்கு ஷை மசோதா அனுமதிக்கிறது; அந்தந்த ஸ்தலங்களில் யாரோ சில வோட்டர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் மெஜாரிட்டி அபிப்பிராயத்தைக் கொண்டு அதர்மம் செய்வதற்கு ஆதாரம் கற்பிக்கிறது; வோட்டு எடுப்பதே தப்பாயிருக்கும்போது, கோவில்களிலும் விக்ரஹாராதனையிலும் நம்பிக்கை யுள்ளவர்கள் தான் வோட் செய்யலாம் என்றுகூட அது சொல்லவில்லை.

15. மத நம்பிக்கைகளைப் பொருத்த விஷயத்தில், "எலெக்ஷன்" வைத்துத் தீர்ப்பு கண்டு பிடிக்கும்படி சொல்லுகிறது; இவ்விதம் "எலெக் ஷன்" நடத்துவது, எவ்வித நீதிக் கொள்கையையும் பொருத்ததாயில்லை; இதற்குச் சமானமாய் வேறிடங்களில் ஏதாவது உண்டென்று சொல்லவும் முடியாது.

16. கோவிலுக்குப் போகிறவர்கள், அந்தந்தக் கோவிலைச் சுற்றி வசிப்ப வர்கள் மாத்திரம் தான் என்பதில்லை; காசி முதல் ராமேசுவரம் வரையில் எல்லா விடங்களிலிருந்தும் பிரஸித்தமான கோவில்களுக்குக் கோடிக்கணக் கான ஆஸ்திக ஹிந்துக்கள் யாத்திரை போகிறார்கள்.

17. இப்போது இந்தியா சட்டசபையிலுள்ள மெம்பர்கள், எலெக்ஷனின போது, இந்த மசோதா விஷயமாய் அதிகாரம் பெறவில்லை; மத ஸம்பந்த மான எந்த விஷயத்தையும் அவர்கள் தீர்ப்பு செய்வதற்கு அர்ஹமில்லை.

18. ஸ்ரீமான் காந்தியின் உபவாஸத்திற்குப் பிறகு, இந்த மசோதா தோன்றிற்று; அவருடைய தீவிர சாமர்த்திய முயற்சிகளால் இப்போது இது ஒரு பெரிய விஷயமாய் உலவுகிறது. இஷ்டப்பட்ட காரியத்தைப் பெரி தாய்ப் பிரசாரப்படுத்துவதற்கு ஸ்ரீமான் காந்திக்கும் அவருடைய ஸகாக்க ளுக்கும் அளவற்ற சௌகரியங்க ளிருக்கின்றன. அதன் காரணமாக, ஷை மசோதா நிஜ நிலைமையை மறைத்து, பொய்யான பிரக்யாதியை அடைந் திருக்கிறது. மேல் யோசிக்காமல் அஸெம்பிளி ஸபை அதைத் தள்ளுவது உசிதம்.



19. ஷை மசோதா சட்டமாகும் பக்ஷத்தில் தேசத்தில் குழப்பங்களும், கல கங்களும் உண்டாகும். வகுப்புக்களுக்குள் குரோதங்களும் சண்டைகளும் விருத்தியாகி, யார் நன்மை யடைவார்களென்று எண்ணப்படுகிறதோ அந்த வகுப்பார்களுக்கே கெடுதலைத் தரும்.

ஆகையால், மனுதார்கள், ஷை மசோதாவைக் கனம் அஸெம்பெளி மெம் பர்கள் மேல் ஆலோசிக்காமல் விடவேண்டுமாய் வணக்கமாய்ப் பிரார்த்திக்கி றார்கள்.

["ஆலய ப்ரவேச மசோதா" வைப்பற்றி, தென் இந்தியாவிலுள்ள வைதிக மத அபிமானிகளெல்லாரும் மேல் கண்டிருக்கிறபடி ஒரு மனு தயார் செய்து, இந்தியா சட்ட ஸபையாருக்கு அனுப்பி இருக்கிறார்கள். நமது ஸஹ்ருதக்களெல்லாருக்கும் அந்த விஷயத்தைத் தெரிவிக்கும்படி, அந்த மனுதாரர்களுட் பலர் கேட்டுக் கொண்டபடியால், அந்த மனுவை இவ்விடத் தில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகர்.]

---

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

யோऽஜ்ஞ: ப்ரவிஶ்ய ஜநவாஸிநாம் ப்ரஸாத்ய
ஸஞ்ஜீவயத்யவிரதம் ஸ்வயாதநா ।
சந்த்ராம்ஶு ஸத்வபாணஶ்ரவணத்வமாதீநு
ராமாநுஜோ ஸமவதே வாமாஷாய தமைஸ ॥

## ஸம்பாதகரின் குறிப்புகள்

---

ஸ்ரீ வேதாந்த தீபிகையும், ஸ்ரீ வைதிக மத தீபிகையும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகையின் அதிகாரிகளும் ஸ்ரீ வைதிக மத தீபி கையின் அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து, நிகழும் மார்கழிமீ முதல் இரண்டு பத்ரிகைகளுக்குப் பதிலாக ஒரே பத்ரிகையை நடத்துவதாகத் தீர் மானித்திருக்கிறார்கள். இந்தப் புதிய பத்ரிகை, ஸ்ரீ வேதாந்த தீபிகை என்னும் பழைய பெயரு டன் அதன் தொடர்ச்சியாகவே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் சார்பில் ப்ரசுரிக்கப்பட்டு வரும். இப்

பொழுது ஸ்ரீ வைதிக மத தீபிகைக்குச் சந்தாவைச் செலுத்தி இருக்கும் சந்தாதாரர்களெல்லாரும் இந்தப் புதிய வேதாந்த தீபிகையின் சந்தாதாரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்., இவ் வர்ஷத்திய பாக்கி ஸஞ்சிகைகள் அவர்கட்கு வேறு சந்தாவின்றிக்கே அனுப்பப்படும். ஸ்ரீ வைதிகமத தீபிகையின் ஸம்பாதகரே இதற்கும் ஸம்பாதகராக நியமிக்கப்பட்டிருப்பதுடன், இதை நடத்தும் மற்றைப்பாரம் முழுவதும் வஹிக்கும்படிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தியை நாம் நமது ஸௌஹ்ருத்துக்களுக்கு ஸந்தோஷத்துடன் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாம், ஸ்ரீ வைதிக மத தீபிகையை ஆரம்பித்து சென்ற ஐந்து மாஸ காலமாக நடைபெறும்படி உபகரித்த சைதாப்பேட்டை ஸ்ரீ ஸத் வித்யா ஸபையின் அங்கத்தினருக்கு நமது க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கவேண்டியது அவச்யம். ஸ்ரீ வேதாந்த தீபிகை நின்றுவிட்டதே என்று சோகித்தவர்களுள் அவர்களும் அடங்கினவர்கள். இப்பொழுது ஸ்ரீ வேதாந்த தீபிகை மறுபடியும் உஜ்ஜீவித்து ப்ரசரிக்க ஆரம்பித்திருப்பதில் அவர்களுக்கு மிக்க ஸந்தோஷமே. அநந்ய ப்ரயோஜநமாக அவர்கள் இம்மாதிரி செய்த உபகாரம் ஒருகாலும் மறக்கத் தகுந்ததன்று.

மற்றுமொரு விஜ்ஞாபநம். பங்களூரில் இருக்கும் ஸ்ரீ. உப. தேவநாதாசார்யர் எம். ஏ. என்னும் நமது ஆஸ்திக ஸௌஹ்ருத்துக்களுள் ஒருவர், கோழியாலம் சப்தம் வங்கீபுரம். ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட 'திவ்யஸூரி சரிதம்' என்னும் பெயருடைய ப்ரபந்தமொன்றை நமது தீபிகையில் வெளிவரும்படி உதவியிருக்கிறார். அதை ஸஞ்சிகை ஒன்றுக்கு எட்டுப் பக்கங்கள் வீதம் நாம் ப்ரசுரித்து வருகிறோம்; அது செய்யுள் ரூபமாக இருந்தாலும், நமது ஸௌஹ்ருத்துக்களுள் அநேகருக்கு அது ரஞ்ஜகமாக இருக்கும் என்பதே நமது நம்பிக்கை. நிற்க, மஹாங்களுடைய சரித்ரத்தை ப்ரகாசிப்பதான ஸம்பந்தத்தின் லாபமே தீபிகைக்கு மிக ச்ரேயஸ்கரமன்றோ?

[illegible] ।

[illegible] ॥

---

ஸ்ரீ:

# திவ்விய சூரி சரிதம்

---

## கடவுள் வணக்கம்

உலக முய்யவு யர்ந்தருண் மீனென
விலகி யன்றவு ணன்றனை யீர்ந்துபின்
குலவு மாமறை கொண்டயற் கோதிய
மலரு மாமுகன் றாண்மலர் மன்னுவாம்.

ஆய வேந்தன கங்கலர் தாய்ச்சிய
ராய மாமயில் வெள்ளமன் றாடிய
பேயு மாமுகி லென்னப் பிறங்கிய
மாய வன்பத மாமலர் நாடுவாம். 2

பேதை வையக முய்ந்து பிழைத்திடக்
கீதை யென்றுதன் கீர்த்தி தனஞ்சயன்
காதி லோதிய பாற்கடற் கன்னியி
னாத னாண்மலர்ச் சேவடி நண்ணுவாம். 3

## வரலாறு

### வேறு

என்னுயிர்தந் தளித்ததிரு வரங்கராமா
 னுசமுனியின் றிருவடியா னிழைத்தநூலைத்
தன்னரிய செவிசேர்த்தித் தகையவாக்கு
 மெமதருளா லுனக்கியைந்த தாலேயெங்கும்
பன்னரிய வுடையவரே முதலாயுள்ள
 வாரியரைப் பாடுகநீ பரிவாயென்று
சொன்னதிரு வருண்மறந்தே மானிடத்தைச்
 சொல்லியவென் னுத்துலங்கத் துவக்கினேனே. 4

## அவையடக்கம்

### வேறு

பணிபதிக்கும் பகரரிய படார்ந்த வாரியர்சீர்
துணிவுகொடு யான்புகலத் துவக்கியதுஞ் சிறுபுழையார்
கணிலரிய வூசியதின் கண்ணகன்ற வானமெலா
மணிலிருந்து நோக்குதற்குப் புக்கதனை மானுமரோ. 5

பெரும்புலவர் பேசலுறு மாழ்வார்க ளாரியர்க
ளிரும்புகழை யானிசைக்க வீங்குமனந் துணிந்தேன்
கரும்பெரிய காட்மலை சென்றடைந்த கால்வழியில்
விரும்பியடை சிறுநரியின் வினையுணர்ந்து நாண்டுறந்தே. 6

நல்லா சுரந்திடுந்தீம் பாலே நனிநிறைந்த
செல்லாச் சிறுகலமுஞ் செப்ப முறுவதென
வெல்லார் குரவ ரிரும்பரிசு பாடியதாற்
கல்லாத வென்கவியுங் கனம்பெருகக் காண்குவரே. 7

## நூல்

### க-வது சருக்கம்

### வைகுந்தச் சிறப்பு

திருத்தகு மெவர்க்கு முற்றுந் தேர்ந்தென்றுந் தெரிதற் கெட்டா
துருத்தகு மமர ரெல்லா முணர்ந்துணர்ந் திறைஞ்சற் பாற்றாய்ப்
பெருத்தவைம் பூதமாதி யவைகளிற் பிணைந்த வேழாய்
விரித்தவா வரணத் திற்கும் பகுதிக்கும் வெளியாய் நின்றே. 1

மறையினாற் பரமா காச மதுவென வழங்கற் பாற்றாய்க்
கறைமிடற் றவனால் வேத னாதியர் கருத்து நாவு
மறைதர நினைத்தற் காகாத் தன்னுழை யடைந்தோர் மீளக்
குறைதரும் பிறிது லோக மிறிந்திடாக் குணத்த தாகி. 2

முகுந்தனென் றரிய நாம முராரியு மிதனா னேற்கத்
தகுந்தகு மெனவெல் லோரும் புகழுறுந் தன்மைத் தாகிச்
சுகந்தனக் குறையு ளாகிச் சோதியின் வடிவா யந்த
முகுந்தனுக் கியைந்த முக்கால் விபூதியாய் முதன்மை யாகி.

இன்னமு மெவர்க்கு மென்று மியம்பொணா மகிமைத் தாகிப்
பன்னரும் பகிரண் டத்துப் பரம்பத மெனலா யோங்கும்
பொன்னெடு வுலக மொன்று வைகுந்த மெனும்பேர் பூண்டு
மின்னிடு மதன்கண் பாயுந் தரங்கிணி மிகுந்த தொன்றே.

அதுகொடும் பவமென் காட்டுத் தீயினா லழுங்கு வோர்க்குச்
சுதையெனக் குளிர்ந்து வெப்ப மாற்றிடுஞ் சுருதி நாதன்
பதுமநா பன்ற னம்பொற் கருணையே யுருகிப் பாயு
மிதுவென வெவரு மேத்தி யிசைந்திடற் கியைந்த தம்மா.

தன்னிடை முழுகு வோர்க டந்துக ளொழிப்ப தாலே
பன்னுவ ரதற்கு நாமம் விரசையென் றெவரும் பாங்காய்
மின்னிய தரள முண்டு மிதந்திடு மரச வன்னம்
தன்னவின் சுவையு முண்டு சத்துவங் கலந்த தாங்கே.



அன்றியும் படியு முத்தர்க் காம்பவத் துவக்கில் வந்து
கன்றிய வுடலைக் காதி யைந்துப நிடத ரூபந்
துன்றிய வளிக்கும் பின்னுஞ் சுழியெனு மெழிலா ருந்தி
யொன்றியின் கோக மாகுந் துணைமுலை யுடைத்தாய் மன்னோ. 7

மிருணாளத் தாரந் தாங்கி மிழற்றுவண் டலர்த்துஞ் செய்ய
திருநாடுங் கமலம் பூவாந் திருவிழி யவையுங் கொண்டு
பெருமாளை யடையப் போந்த பிறப்பறு மவர்க்கு நல்கு
முருகாரும் பெரிய முத்தித் திருவெனக் குலவு மாதோ. 8

அத்தலை யிலகுஞ் சோலை யதனிடை யரிய ஞான
நித்திய சூரி வர்க்க நிழன்மலர்க் கனிக டம்மாற்
பத்தியாய்த் தழைத்து மோங்கும் பாதப மவையாய்ப் போந்த
முத்தருக் குதவா நிற்கு முராரியின் கருணையாலே. 9

கனககல் லார நாறுந் தாமரை முதல காணற்
கினியவாய் மலர்ந்து வண்டு பாண்செய வினையொன் றின்றி
மணியெனு மதுர நீருந் ததும்பவை ரம்ம தீய
மெனவொரு பெயரு தாங்கிந் யிலகுமோர் தடமு மாங்கே. 10

அத்திருப் பொய்கை யோரத் தலர்ந்துமீ துயர்ந்து தோன்றும்
வித்தகத் தொடுநீள் போதி விருக்கத்தண் ணிழற்க ணென்றுஞ்
சித்திரத் தெழுதும் பாவை திகைத்திடத் துலங்கு மோரார்
முத்தணி முறுவ லாரைஞ் ஞூற்றுவர் முதத்தின் வாழ்வார். 11

அவரன வரத மாங்கே யடைதரும் பெரியோர் தம்மைத்
திவளொளி மணிப்பூண் வெண்பட் டாடைதே மாலை தேர்ந்து
நுவலருஞ் சுண்ண மாதி விழுப்பொரு ளவற்றி னோன்மை
யிவருற மகிழ்ந்து பேணி யலங்கரித் திடுவர் மாதோ. 12

சூரவர்தங் கருணை யாலே கோதுறுந் துவக்கு நீத்தே
இரவியே முதல வானோ ரிடையிடை வழுத்த வேறும்
புரையறு மவர்க ளங்க மானவ கரமாம் பூவை
விரவுறுந் திவ்விய மங்க ளத்துரு விழைந்து சேர்வார். 13

ஆங்கிரும் பொழில்க ளூடே யருங்கிளி குயில்க ளாகி
யோங்கிய சூரி சங்க மிவ்வுல குயர்ந்தோர்க் கல்லால்
தாங்கரித் தயலோர் தம்மை யென்றுதண் ணமிழ்தே யென்னத்
தீங்கரும் பியைய நானுந் தெளிவுற விசைக்கு மாதோ. 14

கடிபொழி லிடையி லெங்குங் காந்தார மளிகள் பாடு
மடைவுட னெழுங் கொழுங்கி னமர்ந்தமா கந்தந் தம்மின்

மிடைதரு மினிய சாரி கைக்குல மிழற்றுங் கீத
மடைதரும் புதிய முத்தர்க் கருஞ்செவி விருந்தா மன்றே. 15

சோதியி னுருவா யந்தத் தொல்லுல கிடையிற் றோன்று
மாதியா நகர மொன்ற யோத்தியென் றுரைத்தத் தாலே
யோதுவ ரதனை மேலோ ரதன்பரி சுரைத்தற் கெம்மாற்
போதுமோ வெனினுந் தன்னம் புகலுதும் விழைவின் மன்னே. 16

பத்திக்கும் பிர பத்திக்கு முயர்ந்தவர் பலனு மன்றிப்
புத்திக்குந் தெளிவ தாகும் பொருவிலா னந்தந் தேங்கு
முத்திக்கேத் திரமா மென்று முழங்குறு மினிய கீத
மெத்திக்குந் தனக்குள் ளாக்கி யெழிற் கெலா முறையு ளாமால். 17

பன்மணி யவற்றி னாகிப் பளபளென் றிலகிப் பாங்காய்
மன்னுமா வரண மீரைந் தூற்றினால் வளைக்கப் பெற்ற
வுன்னவு மரிய செம்மை யுற்றிடு முத்தி கோடி
தன்னையங் கடையச் சூழ்ந்த தன்மையை நிகர்க்கு மாதோ. 18

செம்பொனி னொளி ரனேக கோபுர முடியிற் சேர்ந்தே
யும்பரி னடித்துக் கொள்ளுந் துகிற்கொடித் தொகையா மோங்குந்
தம்பெருங் கரங்க டம்மா லழிவுறுந் தன்மைத் தாய
வெம்பும்வே றுலகை யெல்லாம் வெறுத்திழித் தசிக்கு மன்றே. 19

ஒன்பது மணிக ளார்ந்த தோரண முயர்ந்து மின்னும்
மன்பெரு வியப்பு நோக்கி யிந்திர தனுவே மானும்
மின்பசு மரகதத் தின் மேவிடு மவைக ளெல்லா
மின்புறு மெழுனை வானி லெழுந்துலாய்ந் திடுவ போலும். 20

கடைகாணற் கரிய காந்திப் பளிங்கினா லமைந்த வீதி
தொடையாடும் பவனகோடி மணியொளி துலங்கத் தன்மேன்
முடியாரு மணிக ளோரா யிரங்களின் மொய்க்குஞ் சோதி
வடிவாரு மனந்தன் பாய லனந்தனை நிகர்க்கு மன்னே. 21

விண்ணிடை விளங்கும் சோதி முடியுடைக் கனக மாட
மெண்ணுதற் கரிய வாங்கே யெழிலுறு மெகினந் தூங்கு
மொண்ணறுங் கமல நீல மாதிக ளொருங்கு பூத்த
தெண்ணறு மமுத மாருந் திருக்குளம் பலவா மன்றே. 22

திருவமர்க் திணையொன் றில்லா மணியொளிர்ந் தினிய தேனார்
மருவன மாலை யார்ந்து மதியென நிலவு காலுந்
தாளமா வடமுஞ் சேர்ந்த தன்மையா னுலகந் தாய
திருவடி யுடைய மாயன் றிகழுரம் புரையு மாதோ. 23



கஞ்சனைக் கடிந்த மாலுங் கமலமா மயிலு மாட
மஞ்சரி யுடைய காம வல்லியிற் பிணைந்த தெய்வத்
தஞ்சருந் தருக்கண் மீதே யடர்ந்துபன் மணி யொழுங்கி
னெஞ்சலி விழைத்த செய்குன் றெங்கணு முயர்ந்து தோன்றும். 24

இவ்வண மரிய செல்வ மேய்ந்தவந் நகரந் தன்னிற்
செவ்விய பவன மொன்று வைகுந்த மெனலாய்ச் செம்பொன்
கவ்விய மணியிற் செய்த தோரணங் கலந்தா னந்த
திவ்விய சுதையி னாலே தீற்றலுற் றொளிரு மன்னே. 25

அங்கொளிர் தமனியக் குன் றனையவா யிரங்கா லோங்கும்
வெங்கதி ரனேக கோடி விண்ணிடை விளங்கு மாபோற்
செங்கதிர் மணிக ளார்ந்த சிகரங்கள் செறிந்த தாலே
மங்கள மணிமா மண்ட பம்மென வயங்கு மொன்றே. 26

அதனிடை விமல நாத னிருவிபூ திகளு மாரத்
ததைவுற வெழுதி யைந்து தருமலர் பரப்பி நாளு
விதமணி தெளித்து மேலாந் தருமாதி சூரியாகு
மிதமுறு மிருநான் காய பாதமு மிசைந்து மற்றும். 27

ஆயிரந் தள மலர்ந்த வனசமொன் றழகின் மீதே
மேயிருங் கலையின் மிக்க திருவனந் தாழ்வான் மென்மை
யாயமின் போக மார்ந்தே யவன்பண மணியின் சோதி
பாயவே துலங்கு முற்று மோரரித் தவிசு பண்பின். 28

அந்தமா வரிசு மந்த வாதனத் தலரா ளோடுஞ்
செந்துவ ரிதழார் பூமி நீளையா ருடனுஞ் சேர்ந்தே
யெந்தமா வுலகங் கட்கு மீசனா யிலகுங் கஞ்ச
வுந்தியான் மகிமை யீங்கே யுரைக்குதுஞ் சிறிது மாதோ. 29

அவனடி யிணையை யொக்கு மம்புய மழகி னென்று
நுவல்கினு மதுதான் மாயச் சகடற னொதுத்த வின்று
புவனம தொருங் களந்து தூதுபோ யுவகை பூக்கு
மவிரிழை யரிவை யாகக் கல்லையு மமைத்த தின்றே. 30

எந்தையின் கணைக்கால் காக ளத்திருஞ் செருக்கை யீருஞ்
சுந்தரக் கடலின் மூழ்கு மைநாகச் சுடிகை மானு
மந்தமார் முழந்தா ளன்றி யௌவனா ராமத் தோங்கும்
விந்தைசேர் கதலி யென்ன விளங்குறுந் தொடைக ளன்றே. 31

வேறு.

மின்னரிய மேகலையி ரத்தின காங்கண்
மன்னரியு பொற்றுகின் மறைத்திடு நிதம்பம்

பன்னரிய மாலைவெயில் பாய்ந்திட வதன்கண்
டுன்னரிய தூயமுகி லென்னநகு மென்ப. 32

அந்தவுத ரந்தனி லணிந்தவரை மூன்று
மெந்தைகொளு மூவுலகி னெல்லையென மின்னும்
பந்தமறு நான்மறை பழுத்தமலர் மேலோன்
வந்ததிரு வுந்தியெழில் வழங்கவரி தாமால். 33

செந்திரு வணிந்திடு பளிங்கினொளி செய்யுஞ்
சுந்தர வுரத்தரிய தொல்புருட னாகும்
விந்தைமணி யும்பகுதி விண்ணவர்க ளாதன்
விந்தமெனுந் தோள்களிடை வெம்மருவ தாகும். 34

பூதமெனும் வைசயந்தி மாலையொழில் பொங்கும்
மாதவனு ரத்துறையு மாமலர் மடந்தை
காதலொடி ருந்துகளி தாங்கவவன் காண
ஆதரவி னுடுமணி யூசலின லங்கும். 35

அத்திருவு ரத்தின்முறை யாயொளிர னேக
முத்தணிவ டங்களளி வீசுவன மாலை
அத்தனெழி லார்கலியி னொன்றின் மிசையொன்றாய்ப்
பத்தியினெ ழுந்திரையின் பான்மையுறு மன்றே. 36

புந்தியகங் காரமெனும் பொன்வளையி ரண்டுங்
கந்தமலர்க் கைகளிடை யேந்தியடி யார்க
ளெந்தபொழு தென்கருதி யேங்குவரோ வென்றே
சிந்தையொடி லங்குமெழில் செப்பவரி தம்மா. 37

வாமகம லக்கரமென் பாம்பணையில் வைத்துச்
சேமமருண் மற்றதுவுஞ் சேர்த்திமுழந் தாண்மே
லேமமுறு மாழிவளை பின்னுள விரண்டில்.
தாமொளிர வீற்றருளுந் தன்மைசொல லென்னே. 38

கங்கணகெ யூரமணி காந்தியொரு நான்காம்
பங்கய மலர்க் கரங்க ணின்று மிசை பாயச்
சங்கநிகர் கண்ட நிறை சாந்தமொடு நான
மெங்குமண மின்கமழத் தங்குமெழி லென்னே. 39

ஏரெனும னன்கொளுவி ருந்தலகை யாள
நேருமரி பீடமெனு நீரச முகத்திற்
காரணம தின்றியொரு புன்முறுவல் காணச்
சீரொடுது லங்குமிதழ் செம்பவள மன்னே. 40



காணரிய நாசியிரு பாற்கடல்க லக்கா
தேணரிய செங்கரையெ னச்சுடரு மிக்க
மாணரிய நீண்டகனு மன்னுகரு ணைக்கண்
பூணரிய மூன்றுவணம் பூண்டிலகு மாதோ. 41

மென்மைகரு மைக்கிட மெனச்சுருளு மேவி
யின்மைபெறு குந்தளவெ ழிற்செனியி லெல்லாம்
நன்மைபெற மின்னுமுடி நற்சுடரி னன்றே
தொன்மைபெறு முச்சுடரி ரந்தனசொ லிக்கும். 42

கருணைவய மாமொருசங் கற்பமதி லாகும்
பரிவுடன ளித்திடுவ தப்பெரிய பண்பிற்
குரிமையுறு வாரடிய ரத்தகையர்க் குள்ளா
மிருமைபெறு தனவிபவ மெத்தனையு மாங்கே. 43

முப்பொழுது ணர்ச்சியுளன் மூன்றுகுண மூர்த்தி
முப்பொரிய தாமனவன் முத்துயரொ ழிப்போன்
ஒப்பறுமு விக்கிரம னுலகமொரு மூன்றுஞ்
செப்பமுற நன்களிக்குஞ் செம்மலவன் கண்ணன். 44

வெண்கவிகை பாதுகையும் வியனையு மேனை
யொண்மணிய ருஞ்சுடரு மொப்பரிய பட்டுந்
திண்பெரிய ஞானமுள சேடனக லாமே
பண்பினுட னுயடிமை பண்ணவொளிர் கிற்பான். 45

அன்பனும டிப்பணியி ழைப்பவனு மாகும்
மின்கொடிதேர் மேல்விரிவி தானமொடு வீசு
மின்புறுமெ ழிற்சிவிரி யாயுமியைந் தென்றும்
பொன்புரைம றைக்கலுழன் பொங்கமகி ழோங்கும். 46

வேறு

இருவிபூதி யுங்காத்தி லேந்துவேத் திரந்தனக்
கொருமையாகி யோங்கவன்மை யுற்றதேவ ரொன்னலர்
வெருவுமாறு வீறமைந்த சேனைநாத னண்டையிற்
றிருவருள்வி ழைந்துநிற்க வீற்றிருந்து திகழுமால். 47

பத்தியென்ப தற்கிலக்கும் பண்பமைந்த பத்தராஞ்
சுத்துவங்க றங்கின்ற சனகனுதி யோகிய
ரெத்திறத்தி யம்பினுலு மீறுறாத தன்மையை
நித்தமும்பு கழ்ந்துமாடு நின்றகங்க ளிப்பரே. 48

சண்டனாதி வாயிலோருஞ் சண்டமாரு தம்புரை
மிண்டனை குமுதனாதி மிக்ககணநாதருந்
திண்டிறக்க ரீமுகத்த னாதியோருந் திகழ்படை
கொண்டுகைகு வித்துநின்று கூறுமாறி ழைப்பரே. 49

திதியின்மைந்த ருயிர்குடிக்குந் திண்மையைம்ப டைகளும்
மதிநிறைந்த சேதனங்க ளாகிமூர்த்திமான்களாய்ப்
பதுமநாபன் பாதபங்க யங்கள்வாழ்கநாளுமென்
றதிசயித்த சயமுழக்க வாரவாரஞ் செய்யுமே. 50

உலகமுற்று மீன்றவன்னை யாகியேது வொன்றிலா
தலகிலாத கருணைசெய்யு மம்புயத்த கத்தளா
யிலகுசெல்வி யமையமொன்றி லித்தகைப்ப ரன்றிரு
மலர்முகத்தை நோக்கிமெல்ல மாற்றமொன்றிசைப்பளால். 51

வேறு

ஆக்கலு மளித்தலு மழிக்குஞ் செய்கையு
நோக்குமுன் வயமென நுவல்வ ராயினு
நீக்கமற் றிரண்டையு நிலவு நேமியாய்
காக்குமின் செயலையே கலந்து காண்பையால். 52

அத்தொழி லிரண்டினை யயனரற் களித்
தெத்திற மதத்தரு மியைந்து நின்செயற்
கொத்துள மகிழ்வுறச் செழிப்ப தோர்ந்துனைத்
தொத்தறும் விண்டுவென் றிசைப்பர் தொன்மையோர். 53

கருமமும் பிரமமுங் காட்டு மாரணம்
வரைவில படைத்தநின் வழியில் வைகிடுந்
திருவுபப் பிரமமென் றெவருந் தேர்ந்துவாழ்
புரையில நூல்பல புகன்றி ழைத்தனை. 54

உய்ந்திடுந் தடமிவை யொன்று மோர்கிலா
தந்தமி லனாதியா யடைந்த வல்வினைப்
பந்தமி றுக்கிடத் தியங்கிப் பற்பல
ரந்தக ரெனக்கெடுந் தடத்திற் காயினர். 55

உண்மையை யுணர்கிலா துனதின் னுணையை
வெண்ணலி லவமதித் தெழுந்த நீதியை
நண்ணிய கிருபரை யடக்க நானிலம்
பண்ணவர் பாவலீ பரிந்து போந்தனை. 56

ஶாஸ்த்ரவ்யவஹாரேஷ்வபி, இஷ்டாவிஷயதயா ப்ரஸித்தி: ப்ராமாண்யப்ரேரகத்வஞ்ச ஶாஸ்த்ரஸ்ய ஸித்தம், 'இஷ்டாவிஷயத்வம் ப்ரேரகத்வம்' இதி । ஸ்வாபிமத ப்ரேரகத்வாகார: க்ருதிஸாத்யத்வம் இதி । ஸம்ப்ரதாயவிதோ வ்யாசக்ஷதே । ததாஹி—இஷ்டவிஷயத்வாகாரத்வேன ப்ரேரகத்வம், தத்ரைவ ப்ரவ்ருத்தே: இஷ்டாயாம் ஜாதாயாமபி ஸ்வப்ரயத்நாத்ருதே ஸித்த்யபாவஸ்ய ப்ரதீயமானத்வாத், ஸ்வப்ரயத்நாத்ருதேஸித்த்யபாவஸ்ய ப்ரதீயதே சேத், தத்ர

---

தூண்டும் குணமுள்ளது மற்றொன்று ; இவைகளுள் தூண்டும் ஆகாரமே 'உத்தேச்யம்' என்று விவரிக்கலாமோ வென்றால், அதுவும் தனது கக்ஷியிலுள்ள அபிநிவேசத்தால் ஏற்படும் வீண் ச்ரமமே. ஏனென்றால்:ப்ரவ்ருத்தியினால் ஸாதிக்கத் தகுந்ததாக இருப்பதே தூண்டுதலாகின்றதே தவிர, அப்படி ப்ரவ்ருத்தியின்மீது சார்ந்து நிற்கும் ஸித்தியைக் காட்டிலும் வேறுபட்டதான தூண்டுதலொன்று மில்லையன்றோ ? எப்பொழுது ப்ரயத்நமிராவிட்டால் இஷ்டப்பட்ட வஸ்துவின் ஸித்தி வரமாட்டாதோ, அப்பொழுதே ஒருவன் ப்ரவ்ருத்திக்கின்றான். முதலில் வஸ்துவில் விருப்பம் ; பிறகு ஸ்வப்ரயத்நமிராவிட்டால் அது ஸித்திக்கமாட்டாது என்னும் தோற்றம்; அதற்குப் பிறகு ப்ரயத்நம் செய்யவேண்டும் என்னும் இச்சை;

---

அது அதிவ்யாப்தமென்று அதைப் பரிஷ்கரிப்பதற்காகச் சொல்லப்பட்ட 'உத்தேச்யத்வம்' என்பதும் 'இஷ்டத்வம்' என்பதாகவே ஆகிவிட்டால், லக்ஷணத்திற் செய்யப்பட்ட பரிஷ்காரம் நிஷ்ப்ரயோஜநமாகிவிடு மன்றோ ?

ததாஹி— இவ்விடத்தில் எதிர்வாதிகள் பின்வருமாறு வாதிக்கிறார்கள். 'இஷ்டம்' என்பதற்கு, நம்மால் விரும்பப்படுவது என்றும் ப்ரயத்நத்தின் பொருட்டுத் தூண்டுவது என்றும் இரண்டு ஆகாரங்கள் உண்டு. அவைகளுள் முதல் ஆகாரத்தை 'உத்தேச்யம்' என்பதன் குறிப்பாக ஒத்துக்கொண்டால் பரிஷ்காரம் வீணாகி விடுமென்பது உண்மையே. இரண்டாவது ஆகாரத்தைக் கைப்பற்றினால் அது வீணாகமாட்டாது. இது தான் அவர்களின் வாதம். இதற்கு இவ்விடத்திற் சொல்லப்படும் ஸமாதாநமாவது—'தூண்டுதல் என்னும் இரண்டாவது ஆகாரம் 'க்ருதி ஸாத்யம்' என்னும் முதல் லக்ஷணத்தில் அகப்பட்டதாக இருக்கிறபடியால், இந்தப் பரிஷ்காரமும் [illegible]' என்பது தான். தூண்டுதல், என்னும் ஆகாரம் எப்படி 'க்ருதி ஸாத்யம்' என்பதனுள் அகப்பட்டது என்றால் – இஷ்டப்பட்ட பொருள் நமது ப்ரயத்நமின்றிக்கே ஸித்திக்கத் தகுந்ததானால், நாம் அதற்காக ப்ரயத்நம் செய்யமாட்டோம்; நாம் பெரிய ப்ரயத்நத்தைச் செய்தாலும் அது பலிக்கமாட்டாது என்று அறிந்தால், அப்பொழுதும் ப்ரயத்நம் செய்யமாட்டோம் ; நாம் ப்ரயத்நம் செய்தால் அது பலிக்கும் என்று இருந்தால் ப்ரயத்நம் செய்வோமாகையால், ப்ரேரகத்வம் (தூண்டுதல்) என்பது க்ருதி ஸாத்யம் (ப்ரயத்நத்தால் ஸாதிக்கத்தகுந்தது) என்பதனுள் அகப்பட்டதே. அதாவது—எது எது ஒரு மனிதனை ப்ரயத்நம் செய்யும்படி தூண்டுகின்றதோ அது அது ப்ரயத்நத்தால் ஸாதிக்கத்தகுந்ததாகவே இருத்தல் வேண்டும் என்பது தான். ஆகையால் ப்ரேரகத்வம் என்பது க்ருதி ஸாத்யத்வம் என்பதைக் காட்டி

க்ஷா ஜாயதே, தத: ப்ரவர்ததே புருஷ இதி தத்விசார-
ப்ரக்ரியா | தத்ராபீஷ்டஸ்ய க்ருத்யுத்₃தே₃ஶ்யத்வாதிரேகி க்ருத்யு-
த்₃தே₃ஶ்யத்வம் நாம கிமபி ந த்₃ருஶ்யதே |

அதோச்யேத 'இஷ்டதாஹேதோ: ஸுகஸ்ய புருஷானுகூல்யதா, தத்வத் புருஷானுகூல்யத்வம் க்ருத்யுத்₃தே₃ஶ்யத்வம்' இதி சேந்நைவம் | புருஷானுகூல்யம் ஸுகவதித்வ நயாஞ்ஜனம், யதா புரு-

கடைசியாக ப்ரவ்ருத்தி; இது வன்றோ க்ரமம்? உண்மையை அறிந்தவர்களின் கொள்கை இது. 'ஒரு வஸ்து நமக்கு இஷ்டமானது என்பதற்குக் காரணம், அது நமக்கு அநுகூலமாக இருப்பதே. அப்படி அநுகூலமாக இருக்கும் தன்மையே க்ருதியின் உத்தேச்யம்' என்று சொல்லலாமோ வென்றால், அதுவும் உபபந்நமாகமாட்டாது. ஸுகமொன்றே மனிதர்களுக்கு அநுகூலமான வஸ்துவானதால், ஸுகமே உத்தேச்யமாகத் திரியும். உத்தேச்யமென்று விவரிக்கப்படும் கார்யமானது, துக்கத்தைக் காட்டிலும் வேறுப்பட்டது என்னும் காரணத்தால் அதற்கு புருஷ ப்ரதிகூலத்வம் எப்படி சொல்லக்கூடாதோ, அப்படியே அதற்கு புருஷாநுகூலத்வமும் சொல்லக்கூடா தன்றோ? ஆகையால் இப்பொழுது நீங்கள் சொல்வது

லும் வேறுபட்டது என்று சொல்ல இடமில்லை.

இஷ்டதாஹேதோ: ஸுகஸ்ய புருஷானுகூல்யதா — எது நம்மால் இச்சிக்கப்படுகின்றதோ, அதுவே நமது ப்ரயத்நத்துக்கு உத்தேச்யமாகுமென்று சொல்லி, அப்படி இஷ்டமான வஸ்துவில் இரண்டு ஆகாரங்களுண்டென்றும் அவைகளுள் ப்ரேரகத்வம் என்னும் ஆகாரமே இவ்விடத்தில் விவக்ஷிதமென்றும் உபபாதநம் செய்ததற்கு, அந்த ப்ரேரகத்வம் என்னும் ஆகாரம் க்ருதி ஸாத்யத்தைக் காட்டிலும் வேறுபட்டதன்றாகையால், அப்படி உபபாதிப்பது சரியல்ல வென்று கீழில் ஆக்ஷேபிக்கப்பட்டது. இதற்கு மேல், எதிர்வாதிகள் வேறு ஒரு விதமாக ஸமர்த்திக்கப் பார்க்கிறார்கள். அதாவது: இஷ்டமான வஸ்துவுக்குக் கீழ்க் கூறப்பட்டுள்ள இரண்டு ஆகாரங்கள் நீங்கலாக அநுகூலமாக இருப்பது என்னும் மற்றுமொரு மூன்றாவது ஆகாரமும் உண்டு; அதுதான் உத்தேச்யம் என்பதன் கருத்து என்பதுதான். இதற்கு இவ்விடத்திற் செய்யப்படும் தூஷணம் என்னவென்றால்—அநுகூலமாக இருக்கும் பொருள் ஸுகமொன்றே; ஆகையால் உத்தேச்யம் என்பதற்கு ஸுகம் என்று பொருள் கொண்டதாக ஆயிற்று; அது உங்களுக்கு அநிஷ்டமன்றோ? என்பதுதான். எதிர்வாதிகளால் ஒத்துக்கொள்ளப்படும் 'கார்யம்' என்பது ஸுகத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்பதே அவர்களுடைய கொள்கை.

யதா புருஷப்ரதிகூல்யம் து:₂க₂வ்யதிரேகி — இது த்ருஷ்டாந்தமாகக் கூறப்பட்டிருக்கின்றது. கார்யம் என்பது துக்கத்தைக் காட்டிலும் வேறு பட்டதென்னும் காரணத்தால், அதற்குப் புருஷ ப்ரதிகூலத்வம் இல்லை என்று எப்படி நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீர்களோ, அப்படியே அது ஸுகத்தைக் காட்டிலும்



ஷாநுகூல்யம் து:₂க₂வ்யதிரேகி | அத: ஸுகவ்யதிரிக்தஸ்ய புருஷாநுகூல்யத்வம் ந ஸம்ப₄வதி | நநு ச 'து:₂க₂ஸ்யாபி புருஷாநுகூல்யதா து:₂க₂நிவ்ருத்தேரபி ஸுகவ்யதிரிக்தாயா: புருஷாநுகூல்யதா த்₃ருஷ்டா' இதி சேத் | 'ஆத்மாநுகூல்யம் ஸுக₂ம், ஆத்மப்ரதிகூல்யம் து:₂க₂ம்' இதி ஹி ஸுக₂து:₂க₂யோர்விவேக: | தத்ராத்மாநுகூல்யம் ஸுக₂மிஷ்டம் ப₄வதி, தத்ப்ரதிகூல்யம் து:₂க₂ம் அநிஷ்டம் | அதோ து:₂க₂ஸம்யோக₃ஸ்யாஸஹ்யதயா தந்நிவ்ருத்திரபீஷ்டா ப₄வதி | ததே₃வேஷ்டதாஸாமாந்யாத₃நுகூலதாப்₄ரம: | ததா₂ஹி - ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டஸம்ஸாரிண: புருஷஸ்ய அநுகூல்யஸம்யோக₃: ப்ரதிகூல்யஸம்யோக₃: ஸ்வரூபமே-

மற்றுமொரு அர்த்தமே. ஸுகத்தைத் தவிர்த்த வேறொன்றும் மனிதர்களுக்கு அநுகூலமாக மாட்டாதன்றோ? 'ஸுகத்தைக் காட்டிலும் வேறுபட்டதான துக்க நிவ்ருத்தி மனிதர்களால் அநுகூலமென்று கொண்டாடப் படுகின்றதே! அது எப்படி?' என்று கேட்டால், அதற்கு ஸமாதாநம் பின்வருமாறு சொல்லப் படும். எது எது தனக்கு அநுகூலமோ அது அது ஸுகமென்றும், எது எது ப்ரதிகூலமோ அது அது துக்கமென்றும், இவ்வாறு ஸுகத்திற்கும் துக்கத்திற்கும் வாசி கூறப்படுகின்றது. அவைகளுள், தனக்கு அநுகூலமாயுள்ள ஸுகம் தன் ஞல் இஷ்டப்பட்டதாகவும், ப்ரதிகூலமாயுள்ள துக்கம் இஷ்ட விருத்தமாக வும் ஆகின்றது. அநிஷ்டமாயுள்ள துக்கம் நேர்ந்தால் அது பொறுக்கத் தகாததாத லால், அதன் நிவ்ருத்தியை ஜநங்கள் விரும்புகிறார்கள். அவ்விதம் அந்த நிவ்ருத்தி இஷ்டமாகிற படியால் மாத்ரம் அதை எல்லாரும் அநுகூலமென்று ப்ரமிக்கிறார்கள். லோகத்தில் ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றுள்ள ஸம்ஸாரி ஜீவன்கள் எல்லாவற்றுக்கும் சில ஸமயங்களில் அநுகூலத்துடன் சேர்க்கை, மற்றும் சில காலங்களில் ப்ரதிகூலத் துடன் சேர்க்கை, வேறு சில ஸமயங்களில் இரண்டுமின்றிக்குத் தமது ஸ்வரூபத்துடன் மாத்ரம் இருப்பது, என்று மூன்று அவஸ்தைகளுண்டு. அவைகளுள் ப்ரதிகூலத்

வேறுபட்டதென்னும் காரணத்தால் அதற்குப் புருஷாநுகூலத்வமும் இல்லை என்று நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றோ? என்பது கருத்து.

நநு ச — ஸுகத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயுள்ள துக்க நிவ்ருத்தியானது அநுகூலமாகக் காணப்படவில்லையா? என்னும் சோத்யத்திற்கு, 'துக்க நிவ்ருத்தியானது அநுகூலமாகத் தோன்றுவதெல்லாம் ப்ரமமே' என்று ஸமாதாநம் சொல்லுகிறார்.

ஸம்ஸாரிண: — ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டுள்ள ஜீவன்களுக்கே இந்த மூன்று அவஸ்தைகளுண்டு. மோக்ஷத்தை அடைந்துள்ள ஜீவன்களுக்கு ப்ரதிகூலத்தின் சேர்க்கை என்பதே இல்லை. ஒன்று அநுகூலம் மற்றொன்று ப்ரதிகூலம் என்பதெல்லாம் கர்மத்தின் பலம் என்பதே நமது கொள்கை,

ணாவஸ்திதிரிதி விவேகாவஸ்யா: । தத்ர ப்ரதிகூல ஸம்பந்த நிவ்ருத்திஸ்ச அநுகூலஸம்பந்த நிவ்ருத்திஸ்ச ஸ்வரூபேணாவஸ்திதிரேவ । தஸ்மாத் ப்ரதிகூல ஸம்யோகே ஸதஸ்தந்நிவ்ருத்திரூபா ஸ்வரூபேணாவஸ்திதிரிஷ்டா பவதி । ததேஷ்டதயாஸ்யா-நுகூலதாப்ரம: ।

அத: ஸுகவ்யதிரிக்தஸ்யாநுகூலதயா நியோகஸ்ய அநுகூலதாம் வதந்தம் பரிஹஸந்தி ப்ராமாணிகா: । இஷ்டஸ்யாய-

---

தின் நிவ்ருத்தியும் அநுகூலத்தின் நிவ்ருத்தியும் இவை இரண்டும் ஸ்வரூபத்துடன் மாத்ரம் இருப்பதேயாகும். ஆகையால் ப்ரதிகூலத்துடன் சேர்ந்திருக்கும்பொழுது. ஸ்வரூபத்துடன் மாத்ரம் இருப்பதான மூன்றாவது அவஸ்தை ஜநங்களால் விரும்பப்படுகின்றது. கேவலம் ஸ்வரூபத்துடன் மாத்ரம் இருப்பதான அந்த அவஸ்தை யானது ப்ரதிகூல நிவ்ருத்தி ரூபமானதால், அநுகூலம்போல அதுவும் இஷ்டமாகின்றது. இந்தக் காரணம் கொண்டு அதை அநுகூலமென்று ஜநங்கள் ப்ரமிக்கிறார்கள்.

அத: ஸுகவ்யதிரிக்தாஸ்... நியோகம் என்பதற்கு அநுகூலத்தன்மை உண்டு என்று சிலர் சொல்வதும் ப்ராமாணிகர்களால் பரிஹஸிக்கத் தகுந்ததே. அநுகூலமாக இருப்பது ஸுகமொன்றே. நியோகம் என்பது ஸ்வயமாக இஷ்டமான

---

தத்ர — 'ப்ரதிகூலத்தின் ஸம்பந்தம் ஒழிவதை அநுகூலத்தின் சேர்க்கையென்று சொல்லக்கூடாது; அநுகூலத்தின் ஸம்பந்தம் ஒழிவதையும் ப்ரதிகூலத்தின் சேர்க்கையென்று சொல்லக்கூடாது' என்பது இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது. அப்படிச் சொல்லும் பக்ஷத்தில், தூக்கத்தில் அநுகூல ஸம்பந்தம் ப்ரதிகூல ஸம்பந்தம் இரண்டும் இல்லையாதலால் அப்பொழுது ஸுகம் துக்கம் இரண்டுக்கும் ப்ரஸக்தி நேரும்; அது அநிஷ்டம். ஆகையால், துக்கம் நிவ்ருத்தி அடைவதை அநுகூலமென்று சொல்வது சரியன்று.

இஷ்டஸ்ய— இது வரையில், நியோகம் என்பது ஸுகமன்றாதலால் அது அநுகூலமாகமாட்டாது என்பது நிரூபிக்கப்பட்டது. இனி 'நியோகம் ஒரு ஸுக விசேஷமே; ஆகையால் அதற்கு அநுகூலமாக இருக்கும் தன்மை உண்டு' என்னும் வாதம் தூஷிக்கப்படுகின்றது. முதலில் நியோகம் என்பது ஸுகவிசேஷமாக மாட்டாது என்பதை நிரூபிக்கிறார். 'நியோகம் என்பது ஸ்வயம் ப்ரயோஜநமாக இருக்கும் பக்ஷத்தில் அதற்கு அநுகூலத் தன்மையை ஸாதிக்க ப்ரயத்நப் படலாம். அது ஸ்வயம் ப்ரயோஜநமன்றே; உங்கள் கொள்கைப்படி, இப்பொழுது செய்யப்படும் க்ரியையின் பலமாகக் காலாந்தரத்தில் வரப்போகும் ஸ்வர்க்கம் என்னும் ப்ரயோஜநத்தை ஸாதித்துக் கொடுப்பதன்றோ நியோகத்தின் ப்ரயோஜநம்? அப்படி இருக்கையில் அது எவ்விதத்தில் ஸ்வயம் ப்ரயோஜநமாகும்?' என்பது தான் இவ்விடத்திற் சொல்லப்படும் நிரூபணம். நிற்க, 'ஸ்வர்க்ககாமோ யஜேத' [ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் அந்த



விசேஷஸ்ய நிர்வர்த்தகதயைவ ஹி நியோகஸ்ய நியோகத்வம் ஸ்திரத்வம் அபூர்வத்வம் ச ப்ரதீயதே । 'ஸ்வர்க்ககாமோ யஜேத' இத்யத்ர கார்யஸ்ய க்ரியாதிரிக்ததா ஸ்வர்க்ககாமபதஸம்பந்தாஹாரேண ஸ்வர்க்கஸாதநத்வ நிஶ்சயாதேவ பவதி । ந ச வாச்ய:

---

தன்று; ஸ்வயமாக இஷ்டமாயுள்ள மற்றொரு பொருளை ஸாதித்துக் கொடுப்பதாலேயே அதற்கு, நியோகமாயிருக்கும் தன்மை ஸ்திரமாயிருக்கும் தன்மை அபூர்வமாக இருக்கும் தன்மை ஆக இம்மூன்று தன்மைகளும் ஸம்பவிக்கின்றன. கேவலம் ஒரு வ்யாபாரத்தை மாத்ரம் குறிக்கும் 'யஜேத' என்னும் க்ரியாபதம், 'ஸ்வர்க்ககாமோ யஜேத' [ஸ்வர்க்கத்தை விரும்புவோன் யாகத்தைச் செய்தல் வேண்டும்] என்னும் வாக்யத்தில், அந்த வ்யாபாரத்தைக் காட்டிலும் வேறுபட்டதான 'கார்யம்' என்னும் ஒரு அர்த்த விசேஷத்தைக் குறிக்கின்றது என்று சொல்வதெல்லாம், அந்த 'ஸ்வர்க்ககாம:' என்னும் பதத்துடன் சேர்க்கையால் உண்டாகும் 'அது ஸ்வர்க்கத்திற்கு ஸாதநம்' என்னும் நிச்சயத்தாலன்றோ? 'அம்மாதிரி சேர்க்கையால் உண்டாகும் நிச்சயத்தால் அது ஏற்படவில்லை; அச்சேர்க்கையின்றிக்கே அந்த க்ரியாபதத்திற்கு அந்த அர்த்தம்

---

யாகத்தைச் செய்தல் வேண்டும்] என்பதிலிருந்தே ஸ்வர்க்கம் ப்ரயோஜநமென்றும் நியோகம் ப்ரயோஜநமன்றென்றும் தெரிகின்றது.

நியோகஸ்ய நியோகத்வம் ஸ்திரத்வம் அபூர்வத்வம் ச — நியோகத்தில் மூன்று ஆகாரங்கள் உண்டு. அவையாவன:— (1) க்ரியையைச் செய்யும்படி தூண்டும் ஆகாரம், (2) வெகு காலம் இருக்கும் ஆகாரம், (3) வேறு ஒரு ப்ரமாணத்திற்கும் விஷயமாக இராமலிருக்கும் ஆகாரம். இவை மூன்றும் நியோகமானது மற்றொரு பலத்திற்கு ஸாதகமாக இருக்கின்றது என்பதாலன்றோ ஏற்படுகின்றன? ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்யப் புகுகிறவன், 'இந்த க்ரியை நமது இஷ்டமாகிற ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கும்' என்னும் ஜ்ஞாநத்தைக் கொண்டே புகுகிறானாதலால், அந்த க்ரியையால் உண்டாகும் அபூர்வத்திற்குத் தூண்டுதல் என்னும் முதல் ஆகாரம் ஏற்படுகின்றது. காலாந்தரத்தில் வரப்போகும் ஸ்வர்க்கத்திற்கு அது ஸாதகமாகிற படியால் அதற்கு ஸ்திரத்வம் என்னும் இரண்டாவது ஆகாரம் ஏற்படுகின்றது. நாம் செய்யும் யாகமோ க்ஷணிகம்; அந்த க்ஷணிகமான க்ரியையையே அந்த 'யஜி' என்னும் வினைச் சொல் போதிப்பிக்கின்றது; அந்த க்ரியையைக் காட்டிலும் விலக்ஷணமான ஒரு ஸ்திரமான பதார்த்தத்தை அது குறிக்கின்றது; இத்யாதியான காரணங்களால் அதற்கு 'அபூர்வத்வம்' என்னும் மூன்றாவது ஆகாரம் ஏற்படுகின்றது. இந்த மூன்று ஆகாரங்களிலும் அது ஸ்வயம் ப்ரயோஜநமன்று என்பது நன்றாகத் தெரிகிறபடியால் அதற்கு ஸுகத்வம் சொல்வது சரியன்று.

ந ச வாச்ய:—ஒருகால் மீமாம்ஸகர்கள் பின்வருமாறு வாதிக்கலாம். 'ஸ்வர்க்ககாம:' என்னும் பதத்துடன் யஜேத என்னும் பதம் சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த 'யஜேத' என்பதற்கு அபூர்வம் என்னும் ஸ்திரமான ஒரு பதார்த்தத்தைக்

'யஜேதேத்யத்ர ஹ்யயம் நியோக: ஸ்வப்ரயத்நஸாத்யதயைவ ப்ரதீயதே, ஸ்வர்க்ககாமபதஸமபிவ்யாஹாராச்ச ஸ்வஸித்த்யநுகூலஸ்ய நியோஜ்யஸ்ய ப்ரஸித்தே:' இதி । யஜேதேதி ஹி யாகஸ்ய ஸாத்யஸ்வப்ரயத்நஸாத்யதைவ ப்ரதீயதே । ஸ்வர்க்ககாமபதஸமபிவ்யாஹாராதேவ யாகவ்யதிரேகிணோ நியோகஸ்ய ஸ்திரத்வம் ஸுகத்வம் ச இத்யாதி ஸித்த்யதி । தத்ர ஸ்வர்க்க

---

தனது ப்ரதாந அர்த்தமாக ஸ்வயமே உண்டு; 'ஸ்வர்க்ககாம:' என்பதுடன் சேர்வதால் அந்தக் கார்யத்தினுடைய ஸித்திக்கு அநுகூலனையுள்ள நியோஜ்யனுகிற ஸ்வர்க்க காமனுடைய ப்ரஸித்தி மாத்ரமே கிடைக்கின்றது' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும். அது சரியன்று. 'யஜேத' என்னும் க்ரியாபதம் புருஷ ப்ரயத்நத்தால் ஸாதிக்கக்கூடிய வ்யாபாரத்தை மாத்ரமே குறிக்கும். அந்த வ்யாபாரத்தைக் காட்டிலும் வேறுபட்ட கார்யத்திற்கு நியோகத்தன்மை ஸ்திரமாயிருக்கும் தன்மை அபூர்வமாயிருக்கும் தன்மை ஆகிய இந்தத் தன்மைகளெல்லாம் 'ஸ்வர்க்ககாம:' என்னும் பதத்துடன் சேர்வதாலேயே உண்டாகின்றன. அந்தக் கார்யம் அப்படி வேறுபட்டதாயிருப்பதும், 'அது ஸ்வர்க்கத்திற்கு ஸாதநம்' என்னும் தோற்றத்தின் பலமே. வினைச்சொற்களில் காணப்படும் 'லிங்' முதலிய விகுதிகள், கூடச்சேர்ந்து படிக்கப்பட்டுள்ள பதங்களுடைய அர்த்தத்திற்கு ஒத்ததான அர்த்தத்தையே குறிக்கும் சக்தி உண்டாகின்றது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனல், அந்த வினைச்சொல் தனது ப்ரதாநமான அர்த்தமாக அந்த ஸ்திரமான அபூர்வத்தையே ஸாக்ஷாத்தாகக் குறிக்கின்றது என்றே நாங்கள் சொல்கின்றோம். அப்பொழுது அதை ஸ்வயம் ப்ரயோஜநமென்று எடுத்துக் கொள்ளலாமன்றோ?' இந்த வாதமும் நிலைபெற மாட்டாது. எப்படியென்றால்:_ஒவ்வொரு பதத்திற்கும் ப்ரதாநமாக ஒரு அர்த்தம் உண்டு; அந்தப் பதம் மற்றைப் பதங்களுடன் ஒரு வாக்யத்தில் சேர்க்கப்பட்டு ப்ரயோகம் செய்யப்படும்பொழுது, அதன் ப்ரதாநமான அர்த்தம் மற்றைப் பதங்களின் அர்த்தத்துடன் ஒத்துவராமலிருக்கும் பக்ஷத்தில், அப்பொழுது அந்தப் பதம் அதன் ப்ரதாந அர்த்தத்தை இழந்து வேறு ஒரு அர்த்தத்தை அடைவதுமுண்டு. 'கங்காயாம் கோஷ:' [கங்கையில் இடைச்சேரி இருக்கின்றது] என்பது ஒரு வாக்யம். அதில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'கங்கை' என்னும் பதத்திற்கு அதன் ப்ரவாஹமே ப்ரதாநமான அர்த்தம். ஆனல், ப்ரவாஹத்தில் இடைச்சேரி இருக்கமாட்டாதாதலால், அந்த வாக்யத்தில் அந்த 'கங்கை' என்னும் பதம் தனது ப்ரதாநமான 'ப்ரவாஹம்' என்னும் அர்த்தத்தை இழந்து, 'கங்கைக்கரை' என்னும் வேறு ஒரு அர்த்தத்தை அடைகின்றதன்றோ? அம்மாதிரியே 'ஸ்வர்க்ககாமோ யஜேத' [ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் ஒரு யாகத்தைச் செய்தல் வேண்டும்] என்னும் வாக்யத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'யஜேத' என்னும் வினைச்சொல்லுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமும் ஸ்திரமுமான அபூர்வமே ப்ரதாநமான அர்த்தமாக இருந்தாலும், 'ஸ்வர்க்ககாம:' [ஸ்வர்க்கத்தை இச்சிக்கிறவன்]என்னும் பதத்தின் அர்த்தத்துடன் அது ஸங்கதமாகமாட்டாதாதலால், அது அந்த



ஸாதநத்வப்ரதீதிநிபந்தநம்; ஸமபிவ்யாஹ்ருத ஸ்வர்க்ககாமபதார்த்தாந்வயயோக்யம் ஸ்வர்க்கஸாதநமேவ கார்யம் இதராந்வயோபேக்ஷி- யதீதி ஹி லோகவ்யுத்பத்திரபி நிரஸ்தா । ஸ தத்ர ஸங்க்ஷேப:- 'ஸமபிவ்யாஹ்ருத பதாந்தராந்வயயோக்யமேவ இதரபதப்ரதிபாத்யமிதி ஸங்கதாபிதாயிபதஸம்பாதாதேவ வாக்யார்த்தவர்ணஸங்கதமேவ ப்ரதீயதே । தத்ர ஸ்வர்க்கஸாதநமேவ । அத: க்ரியாவ்யதிரிக்தார்த்தாபி விரோதாதேவ பரித்யக்தா' இதி । அத ஏவ 'கங்காயாம் கோஷ:' இத்யாதௌ கோஷம் ப்ரதி வாஸ யோக்யார்த்தவாசகத்வம் கங்காபதஸ்யாஶ்ரீயதே । ஸ்வயம்

---

தல் வேண்டுமென்று லோகவ்யுத்பத்தி அபேக்ஷிக்கவில்லையா ? அந்த லோகவ்யுத்பத்திக்குப் பங்கம் நேர்ந்துவிடுமே! இதனல் சொல்லப்படுவதாவது: ஒவ்வொரு வாக்யத்திலும் ஒவ்வொரு பதத்தால் சொல்லப்படும் அர்த்தமும், அந்தந்தப் பதத்துடன் கூடப்படிக்கப்பட்டுள்ள வேறு பதங்களின் அர்த்தத்திற்கு ஒத்ததாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்; அந்த அர்த்தமும் அந்தப் பதங்களுடைய சேர்க்கையால் ஏற்படும் வாக்யத்தைக் கேட்ட பிறகே தோன்றும். ப்ரக்ருதத்தில் அப்படித் தோன்றும் அர்த்தமாவது, 'ஸ்வர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கும்'கார்யமே ஆகின்றது' என்பது தான். இந்தக் காரணத்தாலேயே, 'கார்யம்' என்பது பதத்தின் ப்ரதாந அர்த்தமாக முதல் முதலே தோன்றுவதாக ஒத்துக்கொள்ளப்பட்ட போதிலும், அந்த அர்த்தமும் வாக்யார்த்தத்திற்கு விரோதிக்கிற படியால் கைவிடப்பட வேண்டியதே. 'கங்காயாம் கோஷ:' [கங்கையில் இடைச்சேரி] என்பது முதலான வாக்யங்களில் கங்காபதம் 'கோஷம்' [சேரி]என்னும் பதத்துடன் சேர்த்துப் படிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, அந்தக் கங்காபதத்திற்கு, வாஸத்திற்கு ஒத்து வரும்படியான அர்த்தத்தைத் தோற்றுவிக்கும் சக்தியை ப்ராமாணிகர்கள் அங்கீகரிக்கிறார்களன்றோ? வாக்யத்திற் சேராமல் தனியாக நிற்கும்பொழுது கங்கா பதத்திற்குக் கங்கா ப்ரவாஹம் என்னும் அர்த்தம் ப்ரதாநமாகத் தோன்றுகிறது என்னும் காரணத்தைக் கொண்டு, வாக்யத்தில்

---

ப்ரதாந அர்த்தத்தை இழந்து ஸ்வயம் ப்ரயோஜந மற்றதும் க்ஷணிகமுமான யாக வ்யாபாரத்தையே குறிக்கின்றது என்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படி அந்த ப்ரதாந அர்த்தத்தை அது இழந்து விடுகிறபடியால், அதற்கு ஸ்வயம் ப்ரயோஜநத் தன்மையை ஸாதிப்பதும், அப்படி அது ஸ்வயம் ப்ரயோஜநமாகிறபடியால் அது ஸாக்ஷாத்தாக அநுகூலமாகவும் ஸுகமாகவும் இருக்கக்கூடும் என்று ஸாதிப்பதும் நிறைவேற மாட்டா. இதுதான் இவ்விடத்திற் செய்யப்படும் நிரூபணம்.

லோகவ்யுத்பத்திரபி நிரஸ்தா—ஒரு வாக்யத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள ஒரு பதம் அந்த வாக்யத்தில் என்ன அர்த்தத்தை ப்ரதிபாதிக்கின்

58950

[illegible] ராயஃ ஷூத ஜதி ஶம்ஶாவதீராயா லெஸௌவொ [illegible] கூராயாா்ஙயீ ஹவதி; ஸாவசூராஉவி யஜெதெதெ தாவநா ரூ ஶ்ரவணெ காயாஉநநூராயா ஷூதஜிதி வாக்யாா் நய ஸஉயெ காயாஸூநநூராயாதா நாவதிஷ்ெ த । காயாஹி யாயிவதஶ்ரவணவெஉாயா வாயஃ காயாஉநநூராயாம் வூதீத திதெக்ஷவி ந ஸஂஶஜூதெ; வாதாதிகாதெ ஶவாநயநாஜிக்ரியா யா ஷஃவாஷவாயா ஜஷவிஶெஷஸாய நதெயெவ காயயுதா வதீதெஃ । அதெ நியொஶஸ ஸாஷாநஙகுருதூம ஸவ ரொகவிரூஜ்ஷ; நியொஶஸ வாஷாநஙகுருதாவயாய ஸவாருவதா வதிதஃ ஷாநாஸவவிரொயஶ் ।

---

படிக்கப்படுகையிலும் அந்தப் பதத்திற்கு அந்த அர்த்தத்தையே எடுத்துக் கொண்டால் அது வாக்யார்த்தத்துக்கு ஒத்துவரமாட்டா தாகையால், அந்த 'கங்கா' என்னும் பதத்திற்கு'கங்கைக்கரை' என்னும் வேறு அர்த்தத்தை எப்படி ஒத்துக்கொள்ளுகிறோமோ அம்மாதிரியே ' யஜெத ' என்னும் பதம் ஒரு வாக்யத்திலும் சேராமல் தனியாக உச்சரிக்கப்படும்பொழுது அது வேறு ஒரு அர்த்தத்தையும் குறியாமல் கார்யத்தையே குறிக்கின்றது என்று ஒத்துக்கொண்ட போதிலும், வாக்யத்திற் சேர்ந்து நிற்கும் பொழுது அந்த அர்த்தத்தை அது இழந்து விடுகின்றது என்றே நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். வேறு பதங்களுடன் சேர்க்கப்படாமல் தனியாக ஒரு பதம் உச்சரிக்கப்படும் பொழுதே கார்யம் அநந்யார்த்தமாகத் தோன்றுகின்றது என்று சொல்வதும் சரியன்று. ' மாட்டை ஓட்டிவா ' என்னும் வாக்யத்தை ஒருவன் உச்சரித்தவுடன் அதைக் கேட்ட மற்றொருவன் மாடு ஓட்டி வருவதைப் பார்த்து விட்டு, முதலில் உச்சரிக்கப்பட்ட வாக்யத்தின் அர்த்தத்தை அறிந்து கொள்ளும் மூன்றுவது மனிதனுக்கு, மாட்டை ஓட்டி வரும் வ்யாபாரம் ஸ்வயம் இஷ்டமாகத் தோன்றவில்லை யன்றோ ? அந்த வ்யாபாரம் துக்க ரூபமாக இருக்கையிலும் வேறு ஒரு இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறபடியால் மாத்ரமே அந்தத் துக்க ரூபமான வ்யாபாரம் கார்யமாகத் தோன்றுகின்றது. ஆகையால் 'நியோகம்' என்பது அநுகூலமானதே என்று சொல்வது ஸர்வலோக விருத்தம்; ' நியோகம் ஸுகரூபமே' என்று சொல்வதும் அநுபவத்திற்கு ஒத்ததன்று.

---

றது என்பதை நிர்ணயிப்பதற்குப் பின்வருமாறன்றோ நாம் ப்ரவ்ருத்திக்கிறோம் ? 'அந்த வாக்யத்தில் தென்படும் மற்றைப் பதார்த்தங்களின் அர்த்தத்துடன் இந்தப் பதத்தின் ப்ரதாநமான அர்த்தம் ஒத்து வருகின்றதா? ஒத்து வராவிட்டால் அந்த அர்த்தத்தை நாம் த்யஜித்துவிட்டு ஒத்துவரும் வேறு ஒரு அப்ரதாநமான அர்த்தத்தை அது ப்ரதிபாதித்தல் வேண்டும்'. இப்படி விசாரித்து, பிறகே ஒரு நிர்ணயத்தைச் செய்கிறோமன்றோ ? இந்த லோக வ்யுத்பத்திக்கு இப்பொழுது இவ்விடத்தில் மீமாம் ஸகர்களால் சொல்லப்படும் வாதம் விரோதிக்கின்றது என்பதுதான் இவ்விடத்திற் சொல்லப்படும் விஷயம்.

ஸ்ரீ:

# நவனீதம்

இது, வித்யாரத்நாகர, வேதாந்தகேஸரீ குடவாசல் V. R. நரஸிம்ஹா ...ர்ய ஸ்வாமிகளால் சின்னாட்களுக்கு முன் எழுதி முத்திரிப்பித்து வெளியி ...பட்டிருக்கிற ஓர் உயர்தரச் செந்தமிழ்ச் சமயநூல். இந்நூல் நம்தேசத் ...திலுள்ள வேதசாஸ்திர பாரங்தர்களான பண்டித சிரேஷ்டர் பலரா ...லும், லௌகிக சாஸ்திர நிபுணர்களான மேதாவிகள் அனேகராலும், பலபடி ...யாகப் புகழ்ந்து போற்றப்பெற்றிருப்பதைக் கொண்டே இதன் பெருமையை ...ருவாறு உணரலாகும். இந்நூல், நம் தேசத்தில் தொன்று தொட்டு ப்ரஸித் ...மாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற சார்வாகம், தார்க்கிகம், ஸாங்கியம், ...ம், ஜைநம், வேதாந்தம், எனப்படுகிற ஆறுவிதமான முக்கிய மதங் ...களின் ஸாரங்களையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் மிக்க தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. மேலும் அந்தந்த மதாசிரியர்களால் அரு ...பெற்ற அந்தந்த மதங்களுக்கேயான அரியபெரிய அஸல் கிரந்தங்கள் பல ...றையும் மிக்க பரிசிரமத்துடன் வெகு காலம் பயின்று, அதன் பயனாகப் ...தமற்ற நடுவு நிலையோடு அவற்றின் தத்வார்த்தங்களை யெல்லாம் இரு ...ம் இலகுவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற பரந்த நோக்கத் ...கொண்டே வரையப் பெற்றிருப்பதால், இப்புத்தகத்தை எல்லா மதத் ...ரும் தந்தம் சமய நூலாகவே மதித்து ஏற்றுக்கொண்டு போற்றுகின்ற சுருங்கச் சொல்லில்: இது போன்ற சமய நூலொன்று நந்தமிழ்நாட் இதுகாறும் உண்டாகியதே யில்லை யென்று கெட்டியாகக் கூறிவிடலாம். ...கைய அரிய பெரிய புத்தகத்தின் அர்த்த ஸாரங்களை அறிந்துகொண்டு ...பெற வேண்டியது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க அவச்யமானது. ...கம் நல்ல கிளேஸ் பேபரில் ராயல் ஸைஸ் ஸுமார் 400 பக்கங்கள் ...ண்டதாய், சுத்தமாய் முத்திரிப்பித்து நேர்த்தியாகக் காலிகோ பயிண்டு ...து விற்பனைக்குத் தயாராக விருக்கின்றது. விலை ரூ. 3 தான். வேண்டி ...கள் " ரா. வரதாசார்யர், B. A., L. T., ஸ்ரீ ஸத்வித்யா புத்தகசாலை ...னஜர், 1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை, மதராஸ் " என்ற விலா ...திற்கு எழுதிக் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**Registered No. M. 916.**

# "வேதாந்த தீபிகை"

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை.
வருஷச் சந்தா: ரூ 3.
தனிப் பிரதி: அணு 5

## குறிப்பு

தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரகடிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாம் "ஸம்பாதகர், வைதிக மத தீபிகை, கோட்னீஸ் கார்டென்ஸ், மாம்பலம், சென்னை" என்ற விலாஸத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர். ஸ்ரீ. வேதாந்த தீபிகை.

---


| | |
|---|---|
| ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:—தேவநாகர எழுத்தில் சுமார் 10,000 பதங்களும் தமிழ் அர்த்தங்களுக்கு அநேக இடங்களில் பகவத்கீதை, உபநிஷத்துக்கள், ஸத்தியா புருஷஸூக்தங்களிலிருந்து உதாரணங்களுடன் | 2—8—0 |
| ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி:— ஷை நூல் கிரந்தத்தின் மிக விரிவாய் உள்ளது. காலக்ஷேபம் செய்பவர்களுக்காக தர்க்கவியாகரண, உதாரணங்களுடன் | 5—0—0 |
| மோக்ஷவழி:—ப்ரஸ்தானத்ரயம், தமிழ்வேதப் பிரமாணத்துடன் | 1—0—0 |
| தசோபநிஷத் தமிழ் மொழி பெயர்ப்பு (அச்சில்) | 1—8—0 |

விலாஸம்:—

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்.

பிரம்ம ஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்

க்ஷேமம் கிராமம். குத்தம்பாக்கம் போஸ்ட், வயா பூந்தமல்லி, செங்கற்பட்டு ஜில்லா. புஸ்தகங்கள் ஸைதாப்பேட்டை ஸத்வித்யா டிபோ மானேஜரிடமும் கிடைக்கும்.


---

Printed by K. R. Press, and published by the
Secretary, Sri Vaishnava Siddhanta Sabha, Madras.